
Koviloor Digital Library



4363
2,11 (ஒகு)


ஐந்தும் அழகிய குமரனும்

குமாரமஞ்சரியின் 5 வது மலர்

சிவசுந்தரி கலைக்கூடம்
53, எல்லை முத்தம்மன் கோயில் தெரு, பழவந்தாங்கல், சென்னை-114.

Koviloor Digital Library

உ
சிவமயம்



அருள்மிகு செளந்தராம்பிகை உடனாய சுந்தரேசுவரர், திருமணக்கோலக்காட்சி
கோவூர், சென்னை. (மாங்காடு குன்றத்தூர் அருகில்)

எங்கள் இனிய நல்லாசிகள்

ஸ்ரீபுவனேஸ்வரி இலவசத் திருமணத் தொடர்பு மையம்

★ முழுக்க முழுக்க சேவையை மையமாகக் கொண்டது
★ மணமக்கள் ஜாதகப் பதிவு இலவசம்
★ மணவழகர் மாலை மாத இதழில் விவரங்களை வெளியிடுவதும் இலவசம்
★ திருமணத்திற்கு பிறகும் அன்பளிப்போ சேவைக் கட்டணமோ பெறப்படுவதில்லை

❁ மணவழகர் மாலை ❁

(முதலியார் சமுதாயத் திருமணத் தொடர்பு மாத இதழ்)

ஆசிரியர் : கோவூர் **K.P. துரை** B.E.,
மேனாள் செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்.

ஸ்ரீபுவனேஸ்வரி நிலையம்
B-32, ஹிந்து காலனி, நங்கநல்லூர், சென்னை - 600 061.

Koviloor Digital Library

3-6



உ

ஓம் குமார நம:




கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 1363
Δ2,11

தனிவள்ளி-வள்ளி-சிவசுப்பிரமணியசுவாமி-தெய்வயானை-தனிதெய்வயானை
செங்குந்தகோட்டம்-சிவசுப்பிரமணிசுவாமி ஆலயம்-சைதாப்பேட்டை-சென்னை-15.

ஐந்தும் அழகிய குமரனும்

"அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்" என்பது நக்கீரரின் திருவாக்காகும். நமக்கு அஞ்சுதல் நிலை வரும்போது "அஞ்சாதே" என அபயத்தை அருளும் ஆறுமுகப்பெருமான் ஐந்தோடு தொடர்பு கொண்டுள்ள செய்திகளை இந்த ஐந்தாம் மலரில் கண்டு மகிழலாம்.

இந்திய மரபிலுள்ள அனைத்து தெய்வங்களின் சிறப்புகளும் ஐந்து என்ற எண்ணிக்கையோடு தொடர்பு கொண்டுள்ளன. சிவபெருமானுடன் பஞ்சாட்சரம், பஞ்ச லிங்கம், பஞ்சபூதத் தலங்கள் என்ற பலநூறு செய்திகள் ஐந்தோடு தொடர்புடையதாக உள்ளதைக் காணலாம். இதுபோன்றே, பராசக்திதேவியுடன் பஞ்சபாணம், பஞ்ச சக்தியர், பஞ்சரூபம் என்ற பல செய்திகளும், விநாயகப் பெருமானுடன் பஞ்சசக்தி, பஞ்சசந்தி, ஐந்துகரம், ஐம்முகக் கணபதி என்ற பலவேறு செய்திகளும் ஐந்தோடு தொடர்புடையதாக இருக்கக் காண்கிறோம். இதனையொத்து முருகனோடு தொடர்புடைய பஞ்ச குமாரர் பஞ்சகோட்டம், பஞ்சமூர்த்தி பஞ்ச உலாத்திருமேனிகள் முதலான அனேக செய்திகளை இம்மலரில் தொகுத்துக் காணலாம். ✡



Koviloor Digital Library



முருகன் ஆலயத்தில் வலம் வரும் பஞ்சமூர்த்திகள்

சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவில் பஞ்சமூர்த்திகள் வலம் வருவதைக் காண்கிறோம். இவர்கள் விநாயகர், சிவபெருமான், உமாதேவியார், சுப்பிரமணியர், சண்டேசுவரர் எனும் ஐவராவர். இதைப்போலவே முருகனின் ஆலயத்தில் நடைபெறும் பெருந்திருவிழாவிலும் பஞ்சமூர்த்திகள் வலம் வருகின்றனர். இவர்கள் முறையே விநாயகர், வள்ளிதெய்வயானை உடனாய முருகப் பெருமான், கஜவல்லி அம்மன், சுமந்தரீசுவரர், வீரபாகுத்தேவர் எனும் ஐவராவர். இவர்களில் விநாயகர் நாற்கரங்களுடன் நின்ற நிலையில், எலிவாகனத்தில் காட்சியளிக்கின்றார்.



வீரபாகுதேவர் - திருப்போரூர்.

முருகப்பெருமான் நான்கு கரங்கள் கொண்டு அவற்றில் அபய, வரத முத்திரைகளும் வஜ்ரம், குலிசம் ஆகிய ஆயுதங்களும் ஏந்தியவராய் நின்ற நிலையில் காட்சியளிக்கின்றார். இவருடைய இருபுறமும் வள்ளியம்மையும், தெய்வயானை அம்மையும் நின்றவாறு காட்சியளிக்கின்றனர். இவர்கள் மூவரும் மயில் வாகனத்தில் பவனி வருகின்றனர்.

மூன்றாவதாக வருபவள் "கஜவள்ளி" என்று போற்றப்படும் அம்பிகையாவாள் இவளுடைய வடிவம் தெய்வயானையின் சக்தியும், வள்ளியம்மனின் சக்தியும் திரண்டெழுந்து ஒரே சக்தியாகப் பெண் வடிவில் காட்சியளிக்கும் நிலையாகும். எனவே இவள் கஜம் - வள்ளி என்ற இரண்டு சொல்லும் இணைந்த "கஜவள்ளி" என்ற பெயரில் அழைக்கப் படுகின்றாள்.

இவள் கீழ்க்கரங்களில் அபய, வரத முத்திரைகளைத் தாங்கி மேற்கரங்களில் தாமரை மலரையும் நீலோற்பல மலரையும் ஏந்தி, அன்ன வாகனத்தில் பவனி வருகின்றாள். இவளைக் குகசக்தி எனவும் அழைப்பர். இவளை யானை மீதும் குதிரைமீதும், மயில் மீதும் அமர்த்தி வலம் வரச் செய்வதும் உண்டு.

நான்காவதாக இடம் பெறுபவர் சுமந்தரீசுவரர் ஆவார். இவர் முருகனின் அணுக்கத் தொண்டர். இவரைக் குகச்சண்டீசர் எனவும் அழைப்பர். பல்லக்கு அல்லது முத்துவிமானம் இவரது வாகனமாகும்.


ஐந்தாவதாக வருபவர் வீரபாகுத்தேவராவார். இவர் முருகனின் தம்பியர்களில் முதன்மையானவர். குகனின் சேனையை வழி நடத்துபவர். இவர் யானை



Koviloor Digital Library

3-6





தனிவள்ளி - வள்ளி - முருகன் - தெய்வயானை - தனிதெய்வயானை

அல்லது சிறு விமானத்தில் பவனி வருவார்.

பெருந்திருவிழா நாட்களில் இவர்கள் ஐந்து பேரும் காலையிலும், மாலையிலும் பவனி வருவது வழக்கமாகும்.

காலப்போக்கில் முருகன் என்றாலே ஆறு என்ற எண்ணிக்கையில் இருக்க வேண்டுமென்று கருதப்பட்டதால் கஜவல்லி அம்மனை எடுத்துவிட்டு வள்ளி, தெய்வ யானை ஆகிய இரண்டு திருவுருவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவர்கள் தனிவள்ளி, தனி தெய்வயானை என்றழைக்கப்பட்டனர். எனவே ஐந்து மூர்த்திகள் ஆறுமூர்த்திகளாகி விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாய முருகன், தனிவள்ளி, தனி தெய்வயானை, சுமந்தரீசர், வீர பாகுத்தேவர் ஆகிய அறுவரும் பவனிவரத் தொடங்கினர் இதில் விநாயகருக்கு எலிவாகனமும் சுமந்தரீசர், வீரபாகு ஆகியோருக்கு விமானங்களுக்கும்,



Koviloor Digital Library



முருகனுக்கும், இரண்டு தனித்தனித் தேவியர்க்கும் விழாவை ஒட்டிய வாகனங்களும் அமைத்து வலம் வரச் செய்யப்பெற்றது. (முருகனுக்கு யானை வாகனமென்றால் இரண்டு தேவியருக்கும் தனித்தனி யானை வாகனங்கள் முருகனுக்குக் குதிரை வாகன மென்றால் தேவியர்க்குத் தனித்தனி குதிரை வாகனங்கள் இப்படியே மூவருக்கும் ஒரே மாதிரியாக வாகனங்கள் அமையும்)

இப்படிப் பல்வேறு வாகனங்களில் இவர்கள் பவனி வரும் அழகைச் சென்னைக் கந்தகோட்டம், சென்னை சைதாப்பேட்டை செங்குந்தகோட்டம் சிவசுப்பிரமணியசாமி ஆலயம், திருப்போரூர்க் கந்தசாமி கோயில் முதலிய ஆலயங்களில் காணலாம். பெருந்திருவிழாவின் சிறப்பு நாட்களில் இவர்களுடன் சோமாஸ்கந்தர், தனிஅம்பிகை, சண்டிகேசுவரர் ஆகியோரையும் திருவீதி வலம்வரச் செய்கின்றனர்.

சென்னை சைதாப்பேட்டை செங்குந்த கோட்டத்தில் வீரபாகுத்தேவர் முன்பும் இரண்டாவதாக வள்ளி தெய்வயானை உடனாய முருகப்பெருமானும் மூன்றாவதாக தெய்வயானைப் பிராட்டியாரும், நான்காவதாக வள்ளியம்மைப் பிராட்டியாரும், ஐந்தாவதாகக் குசண்டியான சுமந்தரீசரும் பஞ்சமூர்த்திகளாக வலம் வருகின்றனர்.

✡✡✡✡✡✡



முருகப்பெருமானின் அணுக்கத்தொண்டரான குகசண்டி (எ) சுமந்தரீஸ்வரர் - திருப்போரூர்

திருச்செந்தூர் பஞ்சமூர்த்திகள்

திருச்செந்தூரில் 1. விநாயகர் 2. வள்ளி தெய்வயானை உடனாய குமாரவிடங்கர் 3. தனி அம்பிகை (ஐப்பசி முதல் பங்குனி வரை தெய்வயானையும், பங்குனிமுதல் ஐப்பசி முடிய நடைபெறும் விழாக்களில்) வள்ளியம்மையும்) 4. நால்வர் பெருமக்கள் 5. சுமந்தரீசுவரர் ஆகிய ஐவர் பஞ்சமூர்த்திகளாக உலாவரக் காண்கிறோம்.

இதில் சமயாசாரியர் நால்வரைப் பஞ்சமூர்த்திகளில் ஒருவராக உலாவரச் செய்வதின் காரணம் தெளிவாகவில்லை. திருச்செந்தூரைப் பூலோக கயிலாயமாகச் சொல்வது மரபு. எனவே, முருகனே சிவபெருமான் என்பதை உணர்த்தவே சிவபெருமானைப் பாடிய நால்வரையும் முருகனுடன் உலாவரச் செய்கின்றனர் என்று கூறுகின்றனர். ✡



Koviloor Digital Library

3-6



குமரனின் ஐந்துவகை வடிவங்கள்

தென்னிந்திய ஆலயங்களில் இறைவனின் வடிவத்தை ஐந்து நிலையில் வைத்து வழிபடுவது வழக்கம். இவை பஞ்சமூர்த்தங்கள் என்றழைக்கப் படுகின்றன. இவ்வகையில் சிவாலயங்களில், சோமாஸ்கந்தர், நடராஜர், தென்முகக்கடவுள், பிட்சாடனார், சந்திரசேகரர் (அ) நித்தியோத்சவர் எனும் ஐந்து சிவ வடிவங்கள் அமைத்திருப்பதைக் காண்கிறோம்.

இதுபோன்றே வைணவ ஆலயங்களில் விஷ்ணு, புருஷன், அச்சுதன், அநிருத்தன், சத்யன் என்ற திருமாலின் ஐந்து வகையான வடிவங்கள் வழிபடப்படுகின்றன. இவர்கள் முறையே மூலவர், உற்சவர், திருமஞ்சனங் கொள்வார், நித்திய உற்சவர், சயனமூர்த்தி என்றும் அழைக்கப்படுகின்றனர். இவை பஞ்சபேரங்கள் என்றும் அழைக்கப்படும்.

காஞ்சிபுரம் காமாட்சி ஆலயத்தில் காமாட்சி தேவியை 1. மூலவகாமாட்சி (நான்கு கரங்களுடன் அமர்ந்திருப்பவள்) 2. ஸ்ரீ சக்ரகாமாட்சி 3. தபஸ் காமாட்சி, 4. பிலாகாச காமாட்சி 5. ஹேம காமாட்சி (பங்காரு காமாட்சி) என்று ஐந்து வடிவங்களில் அமைத்திருப்பதும் இங்கு எண்ணத்தக்கதாகும். இதுபோன்றே முருகன் ஆலயங்களில் அமைந் துள்ள முருகனின் ஐம்பெரும் திருவடிவங்களையும் அவற்றிற்கு நடைபெறும் திருவிழாக்களையும் பூசனைகளையும் இக்கட்டுரை விளக்குகின்றது.

முருகப் பெருமானுக்கு எண்ணில்லாத வடிவங்கள் இருந்தாலும் ஆன்றோர்கள் அவற்றில் குறிப்பிடத்தக்க 16 வடிவங்களைத் தேர்ந்தெடுத்து ஆலயங்களில் அமைத்து அன்பர்கள் வழிபட வகை செய்துள்ளனர். இவை பதினாறையும் உலாத்திருமேனிகளாகச் செய்து உரிய நாட்களில் விழாச் செய்ய முடியாது என்பதால் இவற்றில் ஐந்து வடிவங்களைத் தேர்ந்தெடுத்து உலாத்திரு மேனிகளாக எழுந்தருளிவைக்கும் வழக்கம் உள்ளது.



முத்துக்குமாரசுவாமி
சம்ஹாரக்கோலம் - திருப்போரூர்.

இவர்கள் முறையே 1. வள்ளி தெய்வ யானை உடனாய சுப்பிரமணியர், 2. மயில்மீது அமர்ந்துள்ள பாலசுப்பிரமணியசுவாமி, 3. தண்டாயுதபாணி, 4. ஷண்முகர், 5. பள்ளி யறைக்குமரர் எனப்படும் நித்திய உற்சவர் ஆவர். சிலர் பாலசுப்பிரமணியரை எடுத்து விட்டு வில்லேந்திய வேலவரான முத்துக் குமாரசுவாமியைக் கொள்வர்.

இவற்றில் முதலாவதாக சொல்லப்



Koviloor Digital Library



பட்ட வள்ளி, தெய்வயானை உடனாய ஸ்ரீ சுப்பிரமணியர் முக்கியமான பெரிய விழாக்களில் மட்டுமே உலாக் காண்பார். கொடியேற்றிச் செய்யப் படும் பெருந்திருவிழாக்கள் பொங்கல் முதலிய நாட்களில் மட்டுமே இவர் வலம் வருவார்.

தண்டாயுதபாணி, மாதந் தோறும் வரும் உத்திரநட்சத்திரங் களிலும் பங்குனி உத்திரநாளிலும் உலாக்காண்பார், பௌர்ணமிப் பூசைகள் தண்டபாணிக்கு உரியதா-கும். பெருந்திருவிழாவில் எட்டாம் நாள் மாலையில் இவருக்குச் சிறப்பு வழிபாடு செய்து வழிபடுகின்றனர்.

பாலசுப்பிரமணிசுவாமி சஷ்டிகள் தோறும் ஆலயத்தை வலம் வருவார். மகாகந்தர் சஷ்டி ஆறுநாட் களில் வலம் வருவதும் இவரே. சில இடங்களில் பாலசுப்பிரமணியருக்குப் பதில் முத்துகுமாரசாமி எனப்படும் வில்லேந்திய வேலவரை அமைத் துள்ளனர். இவரே மகாகந்தர் சஷ்டியில் ஆறு நாட்கள் வீதி வலம் வந்து சூரசம்ஹாரம் செய்பவராவார்.

ஆறுமுகப்பெருமான் திருவா திரையிலும், பெருந்திருவிழாவின் பத்தாம் நாளிலும் மட்டுமே வலம் வருவார். இவர் ஆலயத்தின் தென் கிழக்கில் தெற்கு நோக்கி அமைந்த சபாமண்டபத்தில் கொலு வீற்றிருப் பார். இவருக்குத் திருவாதிரையில் அபிஷேகம் செய்து வெள்ளணி அணிவித்துப் பின்னர் சப்தபதம் செய்து வீதி உலாக் காண்பர். திருவிழாவின் பத்தாம் நாளில் வலம் வந்து தீர்த்தம் கொடுப்பதும் இவரே யாவார்.



முத்துக்குமாரசுவாமி
சம்ஹாரக்கோலம் - திருப்போரூர்.

காலப்போக்கில் இந்த ஐந்து மூர்த்திகளுக்கு உரிய நாட்களில் விழாக்களைத் தேர்ந்தெடுத்து செய்வதற்குப் பதில் அனைத்தையும் வள்ளி தெய்வயானை உடனாய முருகப்பெருமானுக்கே செய்யும் வழக்கம் வந்து விட்டது.

பொதுவாக மகாகந்த சஷ்டி விழாவில் முத்துக் குமாரசாமி எழுந்தருளி தாரகன், சிங்கமுகன், சூரபத்மன் ஆகியோரை வெல்வதும் அதற்கடுத்த நாள் தெய்வயானைத் திருமணம் முடிந்து வள்ளி தெய்வயானை உடனாய ஸ்ரீசுப்பிரமணியப் பெருமான் வலம் வருவதும் நடைபெற்றன. இந்நாளில் வள்ளிதெய்வயானை உடனாய முருகனையே சஷ்டி சூரசம்ஹாரத்திற்கும் எழுந்தருள வைக்கின்றனர். (சூரசங்காரத்தின்போது வள்ளிதெய்வயானையை மறைத்து விடுவர்.) இந்த அமைப்பிலான வழிபாடு கள் யாவும், இப்பொழுது காலம், இடம், வழக்கம் ஆகியவற்றைப் பொறுத்து வெகுவாக மாறிவிட்டன.





Koviloor Digital Library



திருச்செந்தூர் குமரனின் ஐந்து வகை வடிவங்கள்

கயிலைமலை அனைய திருச்செந்தூரில் முருகப்பெருமான் ஐந்து வகையான உலாத்திருமேனிகளாக விளங்கி அன்பர்களுக்கு அருள்பாலித்து மகிழ்கின்றான். அந்த அருள்தரும் ஐந்து திருமேனிகளைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காணலாம்.




திருச்செந்தூர் ஆறுமுகநயினார் ஏகாந்த திருக்காட்சி

திருச்செந்தூர் என்றதும் நம் கண் முன்னே நிற்பது ஆறுமாமுகனின் அழகிய வடிவமேயாகும். இவர் இங்கு **"ஆறுமுக நயினார்"** என்று அழைக்கப்படுகின்றார். கருவறையின் முன்புள்ள மகாமண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு இவர் எழுந்தருளியுள்ளார். இவருக்கு எதிரே உள்ள தலைவாயிலின் மீதுதான் ராஜகோபுரம் கட்டப்பட்டுள்ளது. இங்கு எதிரேயுள்ள மண்டபம் இவர் சந்நிதானச் சிறப்பால் "சண்முக விலாசம்" என்று அழைக்கப் படுகின்றது. இவர் விழாவில் சிவப்பு சாத்து, வெள்ளை சாத்து, பச்சை சாத்து என்ற மூவகை அலங்காரங்களைக் கொண்டு முறையே



Koviloor Digital Library





திருச்செந்தூர் மூலவர் இருபுறமும் தங்கத் தாலும் வெள்ளியாலும் ஆன ஸ்ரீபலிநாயகர்

உருத்திரன், பிரமன், திருமால் என்ற மூவராயும் தாம் விளங்குவதை உணர்த்துகின்றார். ஆண்டில் இரண்டுமுறை நடைபெறும் பெருந்திருவிழாவில் இரண்டு முறை இவர் இந்த வகையான மூவகை அலங்காரத்துடன் வீதிகளில் பவனி வருகின்றார்.

இரண்டாவது நிலையிலுள்ள உலாத் திருமேனி வள்ளி தெய்வயானை உடனாய சுப்பிரமணிய மூர்த்தியாவார். இவர் "**குமார விடங்கர்**" என்றும் அழைக்கப்படு கின்றார். இவர் பெருந்திருவிழாவில் காலையும் மாலையும் வலம் வந்து அருள் பாலிக்கின்றார்.

மூன்றாவது நிலையில் விளங்கும் பெருமானுக்கு ''**அலைவாய் உகந்த பெருமாள்**'' என்பது பெயர். இவர் மாதப் பிரவேசம் முதலிய சில திருவிழாக்களில் எழுந்தருள்கின்றார். இவரும் இரு பெருந் தேவியருடன் காட்சியளிக்கின்றார்.

நான்காவது உற்சவமூர்த்தியாக இருப்பவர் தனித்த சுப்பிரமணியராவார். இவருக்கு ★"**ஜெயந்தி நாதர்**" என்பது பெயராகும். சூரசம்ஹாரத்திற்கு எழுந்தருளி வெற்றி காண்பவர் இவரே. இத்தலத்தில் பெருமான் அவுணர் கூட்டத்தை வென்றபின் தங்கியதால் இதற்குச் ஜெயந்திபுரம் என்பது பெயராயிற்று. அதுவே ஜெயந்தி என்,று சுருக்கமாகவும் வழங்கப்படும். இதன் பெயரால் இந்த முருகப்பெருமான் * ஜெயந்திநாதர் என்று அழைக்கப்படுகின்றார்.

ஐந்தாவதாக விளங்குபவர் நித்தி யோத்சவர் என வழங்கப்படும். ஸ்ரீபலி நாயக ராவார். இங்கு வெள்ளியால் செய்யப்பெற்ற பலிநாயகரைக் காணலாம். இவர் தினமும் ஸ்ரீவேலி எனப்படும் உற்சவம் கண்டருளு கின்றார். (மேலும் இங்குத் தங்கத்தால் ஆகிய நித்திய உற்சவரும் உள்ளார். குலசேகரன் என்பவரின் நல்வாழ்வின் பொருட்டு இந்தத் திருமேனி கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திருமேனியின் பீடத்தில் "வல்லம் நகர் வாழ் குலசேகரன் வாழி" என்று பொறிக்கப் பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். ✡

★ இது இந்திரனின் மகனான ஜயந்தனால் அமைத்து வழிபட்ட திருவடிவம் என்பர். இவரை வழிபட்டால் இழந்த செல்வாக்கைப் பெறலாம். உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் சூழ்நிலையாலும் கிரகக் கோளாறாலும் தனது பதவியை இழந்து வருந்தும்போது இவரை வழிபட்டால் அவை மீண்டும் கிடைக்கும் என்பது நம்பிக்கை யாகும். இப்படிப் பலர் இவரை வழிபட்டுத் தமது இழந்த பதவியைப் பெற்ற வரலாற்றை இப்பொழுதும் காணமுடிகிறது. ✡



Koviloor Digital Library



திருவிடைக்கழி முருகனின் ஐந்து வடிவங்கள்

திருக்கடையூருக்கு மேற்கே 5கி.மீ. தொலைவில் அமைந்த "திருவிடைக்கழி" தலைசிறந்த சிவசுப்பிரமணியத்தலமாகும்.

ஒருசமயம் இரண்யன் என்ற அசுரன் இருந்தான். அவன் அசுரனாக இருந்தாலும் மகாசிவபக்தனாக விளங்கி அளவற்ற தவங்களைச் செய்து அரிய வரங்களைப் பெற்றிருந்தான். அவனுடைய பிறப்பின் குணத்தால் தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தினான். இதனால் முருகப் பெருமான் அவன் மீது போர் தொடுத்தார். நீண்டநேரம் போர் செய்து களைத்த அவன் வலி இழந்து பல மாயங்கள் செய்து, அவையும் பயனில்லாமற்போகவே ஒரு பெரிய மகரமீன் வடிவமாகமாறிக் கடலில் சென்று ஒளிந்து கொண்டான். அங்கிருந்தவாறு மீண்டும் மீண்டும் பல தொல்லைகளைச் செய்து வந்தான். பின்னர் அவன் ஒரு மாமரமாகிப் போர் தொடுத்தான். பெருமான் அவனைப் பிளந்து தனது திருவடியில் ஒடுக்கினார்.

அவனைச் சங்கரித்த பாவம் தீர இந்த திருவிடைக்கழியில் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தார். அந்தக் கோலத்திலேயே இங்கு எழுந்தருளியுள்ளார்.

இங்கு உள்மண்டபத்தில் நின்று தரிசிக்கும் பொழுது கருவறையில் முருகனையும் அதனுள்ளமைந்த கருவறையில் (முருகன் தனது பாவம் தீரப் பூசித்த) பாவவிநாசர் என்ற லிங்கமும் அமைந்துள்ளதையும் கண்டு தரிசித்து மகிழலாம்.

சிவபெருமான் முருகன் ஆகிய இருவரும் இரண்டு கருவறையில் எழுந்தருளி யுள்ளனர். ஆனால் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக ஒன்றுபோல அமைந்துள்ளன. சிவபெருமான் முருகனுக்கு அருள் பாலித்துத் தாமும் முருகனும் வேறல்ல



இரண்ய சம்ஹாரர் திருவிடைக்கழி

ஒருவரே என்பதை உணர்த்தும் வகையில் இங்கு எழுந்தருளியுள்ளார் என்பர். இதனால் இங்கு முருகனுக்குச் சிவனுடைய பெயர்களே வழங்குகின்றன.

இங்கு ஐந்து வடிவங்களில் முருகப் பெருமான் காட்சியளிக்கின்றார். இவற்றில் முதல் வடிவம் பாவவிநாசர் எனப்படும் மூலவராக விளங்கும் பாலசுப்பிரமணியராவர். இவர் இரண்டு கரங்களுடன் காட்சியளிக் கின்றார். (மூலவராக விளங்கும் சிவ பெருமானுக்கும் பாவ விநாசர் என்பதே பெயராகும்)

இரண்டாவது நிலையில் சோமாஸ



Koviloor Digital Library



கந்தரைக் காணலாம். பெயர் சோமாஸ்கந்தர் என இருந்தாலும் இங்கு இருப்பது வள்ளி தெய்வயானை உடனாய முருகப் பெருமானின் வடிவமேயாகும். மேலும் (சோமாஸ் கந்தருக்குத் தனியம்பிகை இருப்பது போல) தெய்வயானை அம்பிகை தனித்த பீடத்தில் இங்குத் தனியாகக் காட்சியளிக்கின்றார். இவருக்குத் திருவாரூரில் தியாகராஜருக்கு இருப்பது போலவே தனிச்சந்நிதி அழகிய விமானத்துடன் சிறப்பாக அமைக்கப் பெற்றுள்ளது.

மூன்றாம் நிலையிலுள்ள சந்திரசேகரர் சந்நிதியைக் காண்கிறோம். இதில் முருகன் நாற்கரங்களுடன் நின்றவாறு காட்சியளிக் கின்றான். அருகில் தெய்வயானை நாயகி நின்றவாறு காட்சியளிக்கின்றாள்.

நான்காம் நிலையிலான நடராஜர் சந்நிதியைக் காண்கிறோம். இதில் முருகன் வில்லேந்தியவேலவனாக நெடிய கம்பீரமான திருஉருவத்துடன் விளங்குகின்றார். அருகில் தெய்வயானை நின்றவாறு காட்சியளிக் கின்றார். இவரை இரண்யசம்ஹாரர் என்று அழைக்கின்றனர். இவருக்கு அருகில் மணிவாசகப் பெருமான் எழுந்தருளி வைக்கப் பெற்றுள்ளார். மார்கழி மாதம் திருவாதிரையில் மணிவாசகர் விழாவான திருவெம்பாவை விழா இங்கு நடத்தப் படுகின்றது. திருவாதிரை நாளில் நடராஜராகப் போற்றப்படும் இரண்ய சம்ஹாரர் திருவுலா காண்கின்றார். இம்முறை யிலான திருவெம்பாவை வழிபாடு வேறெந்த முருகன் ஆலயத்திலும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. ஐந்தாம் நிலையிலுள்ளது பிரதோஷ நாயகர் வடிவமாகும். இதில் முருகன் நான்கு கரங்களுடன் நின்றவாறு காட்சியளிக்கின்றார். இவருடன் தேவியர் அமைக்கப் படவில்லை. சஷ்டி, பிரதோஷம் முதலிய நாட்களில் இவர் பவனி வருகின்றார்.

இதுபோன்று (சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் நடராஜர், பிரதோஷநாயகர் எனும்) சிவபெருமானுடைய பெயர்களில் முருகனின் வடிவங்களை வைத்துப் பூசிக்கும் நிலையை வேறெங்கும் காணமுடியவில்லை. இது ஐம்முகச் சிவபெருமானும் ஆறுமுகச் சிவனான முருகப்பெருமானும் ஒருவரே என்பதை உணர்த்தும் அமைப்பு என்று கூறுவர். ✡

திருப்போரூர் முருகனின் ஐந்து வகை வடிவங்கள்

திருப்போரூர் ஆலயத்தில் முருகப் பெருமான் ஐந்து வடிவங்களில் காட்சி யளிப்பதைக் காண்கிறோம். இங்குள்ள பெரிய உற்சவரான "சமராபுரி நாயகர்" தனித்த பெரிய சபாமண்டபத்தில் கொலுவீற்றிருக் கின்றார். இவர் மேற்கரங்களில் கெண்டி, அட்ச மாலையும், முன்வலக்கரத்தில் அபய முத்திரையும் தாங்கி இடதுகரத்தைத் தொடை யின்மீது வைத்துள்ளார். இவருடைய இருபுற மும் வள்ளி, தெய்வயானைப் பிராட்டியார்கள் எழுந்தருளியுள்ளனர். கொடியேற்றிச் செய்யப் படும் பெருவிழாக்களில் பவனிவரும் பெருமான் இவரேயாவார்.

இவருக்கு அடுத்ததாக நித்தியோத் சவர் எனப்படும் ஸ்ரீபலி நாயகர் எழுந்தருளி யுள்ளார். இவரும் வள்ளி தெய்வயானையுடன் காட்சியளிக்கின்றார். தினமும் உச்சிவேளை யில் சிறுபல்லக்கில் இவரை அமர்த்திக் கோயிலை வலம் வந்து ஸ்ரீபலி எனப்படும் நாள்விழா நடைபெறுகிறது. மூன்றாவதாக விளங்குவது முத்துக்குமார சுவாமியின் திருவடிவமாகும். இவர் ஒருகாலை மயில்மீது ஊன்றி வில்லேந்திய வேலவராகக் காட்சி யளிக்கின்றார். இவர் உட்பிராகாரத்தில் வாயு மூலையான வடமேற்கு முனையில் எழுந் தருளியுள்ளார். இவருடைய வடிவழகு எழுதி



Koviloor Digital Library





வள்ளி, தெய்வயானை நாயகியர் உடனாய பள்ளியறைக்குமரர் - திருப்போரூர்.

உணர்த்த முடியாததாகும். மேற்கரங்களில் சக்தி, குலிசமும் கீழ்க் கரங்களில் வேலையும் வில்லையும் ஏந்தியுள்ளார். இவர் தேவியா இன்றித் தனித்துப் போருக்குச் செல்லும் கோலத்துடன் காட்சியளிக்கின்றார். இவரே சூரசம்ஹரத்திற்கு எழுந்தருளி சூரனைவதை செய்பவருமாவார்.

நான்காவது நிலையில் உலாமூர்த்தி யாக இருப்பவர் ஆறுமுகசாமியாவார். இவருடன் இருபெரும் தேவியரும் உள்ளனர். ஆறுமுகங்களும் பன்னிரண்டு கரங்களும் கொண்டவராக இப்பெருமான் மயில்மீது அமர்ந்து அருள்பாலிக்கின்றார். இவர் விழாவின் பத்தாம் நாள் நடக்கும் தீர்த்தவாரி, மார்கழித் திருவாதிரை ஆகிய நாட்களில் பவனிவந்து அருள்பாலிக்கின்றார்.

ஐந்தாவதாக விளங்கும் மூர்த்தி "பள்ளியறைக் குமரர்" ஆவார். இக்குமரர் இரண்டு தேவியருடன் ஒரேபீடத்தில் அமர்ந்தவாறு அருள்பாலிக்கின்றார். இவர் அர்த்தசாமத்தில் ஆலயத்துள் வலம்வந்து பள்ளியறையில் உள்ள சப்ரமஞ்சத்திற்கு எழுந்தருளி அதில் ஊஞ்சலாடி அன்பர் களுக்குக் காட்சி வழங்குகின்றார்.

இப்படி ஐந்து நிலைகளில் திருப் போரூர் குமரன் காட்சியருள்வது கண்டு இன்புறத்தக்கதாகும்.

(பெரியநாயகரான சமராபுரிநாயகரின் திருமேனி காலங்கடந்ததாகவும், நுண்மை நிரம்பிய மென்மையாக இருப்பதாலும் சாதாரண விழாக்களுக்குப் பவனி வரும் வகையில் புதியதாக வள்ளி, தெய்வயானை உடனாய உற்சவரின் திருமேனி ஒன்று செய்து வைக்கப்பெற்றுள்ளது. இந்த மூர்த்திக்கு **இளையநாயகர்** என்பது பெயராகும். இவ்வகையில் இப்போதுத் திருப்போரூரில் ஆறுஉலாமூர்த்திகள் உள்ளனர்.)

✡✡✡✡✡✡



Koviloor Digital Library



முருகன் அளித்த பஞ்சாயுதங்கள்



(இக்கட்டுரை திருமுருகப்பெருமான் தனது மாமனான திருமாலுக்குப் பஞ்சாயுதங்கள் அளித்ததை விளக்குகிறது)

பொதுவாக அனைத்துத் தெய்வங்களின் ஆயுதங்களும் பூசைக்கு உரியன என்றாலும் திருமாலின் பஞ்சாயுதங்கள் தனிச் சிறப்புடையதாக இருக்கின்றன. இவை வில், வாள், சங்கு, சக்கரம், கதை என்ற ஐந்தாகும். ஒரு சமயம் திருமால் தாரகாசூரன் என்ற அசுரன் மீது தனது பஞ்சாயுதங்களைச் செலுத்திப் போர்புரிந்தார். மிகுந்த வலிமை படைத்த அந்த அசுரன் அவருடைய வில்லையும், கதையையும், உடைத்துத் தூளாக்கினான். அவர் செலுத்திய சக்கராயுதத்தைத் தனது மார்பில் பதக்கமாக அணிந்து கொண்டான். அவருடைய சங்கினையும், வாளையும் பறித்து ஒழித்தான். இதனால் அஞ்சிய திருமால் போர்க்களத்தை விட்டு ஓடி ஒளிந்தார். திருமால் பஞ்சாயுதங்கள் இன்றி நெடுநாள் வருந்தித் தனித்திருந்தார்.

பின்னர், முருகன் அவதாரம் செய்து தாரகாசூரனை அழித்துத் தேவர்களுக்கு அருள்புரிந்தான். தாரகனை முருகன் வென்று சாய்த்த பிறகு அவனுடைய மார்பில் பதக்கமாக விளங்கிய சக்கராயுதம் முருகனின் மார்பில் பதக்கமாக மாறி அமர்ந்தது. அதன் பின்னர் அவர் தெய்வயானைப் பிராட்டியாரை மணந்து கந்தமாதனகிரியில் சுகமாக வீற்றிருந்தார்.

அந்த வேளையில் நீண்ட நாட்கள் ஆயுதங்களின்றி வருந்தியிருந்த திருமால் "சித்தாச்சிரமம்" என்ற இடத்தில் முருகப் பெருமானைக் குறித்துக் கடுந்தவம் செய்தார். அவருக்கு முருகன் காட்சியளித்து வில், வாள், சங்கு, கதை ஆகியவற்றைப் புதியதாகப் படைத்து அளித்தார். பின்னர்த் தணிகை மலைக்கு வரும்படிக் கூறி மறைந்தார்.

அதன்படியே திருமாலும் திருத்தணிகைமலைக்கு வந்து மருகனைப் பூசித்தார். அப்போது முருகன் தனது மார்பில் பதக்கம்போல் விளங்கியதும் ஒளிபொருந்தியதும். எண்ணற்ற பற்களை உடையதும் வலிமை மிகுந்ததுமான சுதர்சனச் சக்கரத்தை எடுத்துத் திருமாலுக்கு அளித்து அருள் புரிந்தார். (இதனை நினைவு கூறும் வகையில் திருத்தணிகை மூலவரின் மார்பில் வட்டமானபள்ளம் ஒன்று அமைந்துள்ளது. அதனை அபிஷேக காலங்களில் அன்பர்கள் கண்டு மகிழலாம்)

அன்று முதல் முருகப்பெருமான் "தான பஞ்சகமூர்த்தி" என்றும் "பஞ்சாயுதப் பிரதான மூர்த்தி" என்றும் அழைக்கப்படுகின்றார். இதனைச் சுப்பிரமணிய பராக்கிரமம் முதலான நூல்களால் அறியலாம்.

(ஆதியில் திருமால் சிவபெருமானை வழிபட்டு சக்கரம் பெற்றார். பின்னர் அவர் முருகப்பெருமானை வழிபட்டுச் சக்கரம் பெற்றார். மீண்டும் ஒரு சமயம் விநாயகரைப் பணிந்து சக்கரம் பெற்றார். அப்படிச் சக்கரம் அளித்த விநாயகர் காஞ்சிபுரத்தில் விகடசக்கர விநாயகர் என்ற பெயரில் எழுந்தருளியுள்ளார். மூன்றும் ஒரே சக்கரந்தான் என்றாலும் திருமால் அசுரர்கள் மீது அதனை ஏவியபோது அது அவர்களிடம் சிக்கிக்கொள்ள அவர்களை வென்ற முருகனாலும், கணபதியாலும் கைக்கொள்ளப்பட்டு மீண்டும் திருமாலுக்கே அளிக்கப்பட்டன என்று புராணங்கள் கூறும்.)



Koviloor Digital Library

ஸ்ரீ ஆண்டவர் A. No. 4363 12 M(85) நூலகம், கோவிலூர்



பஞ்சாமிருதம்



ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்

அறுமுகச் சிவபெருமானான முருகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வது மகாபுண்ணியமாகும் எனவே அவருக்கு 1008 வகையான பொருட்களைக் கொண்டு திருமுழுக்காட்டுவதைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. அன்பர்கள் பால், தயிர், தேன், இளநீர், விபூதி, பன்னீர், முதலான பொருட்களைக் காவடியாகக் கட்டிச் சுமந்து சென்று முருகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து மகிழ்கின்றனர். முருகனுக்கு உரிய தலை சிறந்த அபிஷேகப் பொருளாகத் திகழ்வது பஞ்மிருதமாகும்.

இனிய சுவையான கருப்பஞ்சாறு, தேன், நெய், பால், தயிர் ஆகிய ஐந்து பொருட்களே பூலோக அமிர்தங்களாகும். இவற்றைத் தனித்தனியே பாத்திரங்களில் நிரப்பி, உரிய மந்திரங்களால் பூசித்துப் பிறகு ஒன்றாகக் கலந்து அபிஷேகிக்க வேண்டும். இந்தக் கலவைக்கே பஞ்சாமிருதம் என்பது பெயராகும்.

கருப்பஞ்சாறு கிடைக்காத காலங்களில், அதற்குப்பதிலாக சர்க்கரையை நீரில் கரைத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். சிவதரு மோத்திரம் என்ற நூல் பால், தயிர், நெய், சர்க்கரை, தேன் ஆகியவற்றையே பஞ்சாமிருதம் என்று கூறுகின்றது. முருகப் பெருமானுக்குப் பஞ்சாமிருதப்பிரியன் என்றே பெயர் வழங்குகின்றது. குறிப்பாகப் பழனிமலையில் வீற்றிருக்கும் தண்டாயுத பாணிக்குப் பஞ்சாமிருதம் சிறப்பான அபிஷேகப் பொருளாக விளங்குகின்றது.

பொதுவாக வாழைப்பழம், தேன், சர்க்கரை, பால், நெய் ஆகியவற்றைச் சேர்த்து சிறப்பான முறையில் அபிஷேகம் செய்கின்றனர்.

ஆனால், பழனியில் பஞ்சாமிருதத்தை வாழைப்பழம், தேன், பேரீச்சம்பழம், பால், சர்க்கரை, ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கின்றனர். இதில் தேன் குறிஞ்சி நிலத்தின் விளைபொருளாகவும், வாழைப் பழம், முல்லைநிலப்பொருளாகவும், கருப்பஞ் சாறு அல்லது சர்க்கரை மருதநிலப்பொருளாக வும், பாலினை பாற்கடலை உணர்த்தும் நெய்தல் நிலப்பொருளாகவும், பேரீச்சம் பழத்தை பாலைநிலப் பொருளாகவும் கொள்வர். இவை தமிழனரின் பழந்தமிழ் கொள்கைக்கேற்ற குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்களின் பொருள்களாக விளங்கி அவற்றின் தலைவனான குமரனுக்கு அபிஷேகப் பொருளாக விளங்குகின்ற தென்பர். இந்நாளில் பஞ்சாமிருதத்தைப் பலவகையான பழங்களை ஒன்றுகலந்து செய்கின்றனர். ஆனால் இதற்கான முறை இன்னதென்று தெரியவில்லை. ✡



Koviloor Digital Library



பாம்பன் சுவாமிகள் அருளிய பஞ்சாமிருத வண்ணம்

வண்ணம் என்பதற்கு இசைப்பாட்டு என்பது பொருள். முருகன் மீது ஐந்து வகையான அமுதம் போன்று சுவை நிறைந்த பாடல்களை ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிச்செய்துள்ளார். இவ்வைந்து பாடல் களே "பஞ்சாமிருதவண்ணம்" என்று அழைக் கப்படுகின்றன.

இதில் முதல்பாடல், பால்வண்ணம் என்றும், இரண்டாவது பாடல் தயிர் வண்ணம் என்றும், மூன்றாம் பாடல் நெய் வண்ணம் என்றும், நான்காவது பாடல் சருக்கரை வண்ணம் என்றும், ஐந்தாம் பாடல் தேன் வண்ணம் என்றும் பெயர் பெறுகின்றன. இனி இவை கூறும் செய்திகளைக் காணலாம்.

1. பால்வண்ணப்பாடல்

இதில் சூரபத்மனும், முருகனும் போரிட்ட போர்க்களத்தின் வர்ணனை, இறந்த அசுரர்களின் உடலையும்; குடலையும் கொழுப்பையும் உண்ணும் பேய்கள் "அரன்மகன்புறம் ஜெயம்" (சிவனின் மகன் பக்கமே வெற்றி) என்று கோஷமிடுதல். மாமரமாகிய சூரனைப் பெருமான் பிளத்தல் - போகமங்கையரின் போலிக்காதலும் அவர் களோடும் உறவாடுதலால் உண்டாகும் பற்பலபிணிகளும் ஒழிய வேண்டுதல் ஆகியன கூறப்பட்டுள்ளன.

2. தயிர் வண்ணப்பாடல்

இதில் பார்வதி, இலக்குமி, சரஸ்வதி, தெய்வயானை, வள்ளியம்மை ஆகியோரது சிறப்புகள் பேசப்படுகின்றன. குறிப்பாக வனவல்லியாகிய வள்ளியின் திருமணத் தத்துவ நுண்கருத்துக்கள் விளக்கப்படு கின்றன.

3. நெய் வண்ணப்பாடல்

இதில் வஞ்சனைக்குணம்மிக்க தீயவர் களின் தொடர்பு அறவும், அடியவர்களோடு கூடியிருக்கவும், சிவனுக்கு அடிமைபுரிதலும், வேண்டப்படுகிறது. மேலும் சக்தி தாண்டவம், மயில்வாகனப் பெருமானின் நடன வரலாற்று நுண்பொருள், "காலன் வருமுன்பு கந்தன் காட்சிதரவேண்டுதல்" மேலும் இது எங்கு பாடப்படுகின்றதோ அங்கே முருகன் இருப்பான் என்பது; பிழைபொறுத்து மன்னிக்கவேண்டுதல் ஆகியனவும். இடம் பெற்றுள்ளன.

4. சர்க்கரை வண்ணப்பாடல்

இதில் நாள், கிரகம், திதி, நட்சத்திரம், ஆகியன அடியவர்களுக்கு நன்மையே செய்ய முருகன் அருளுதல் ஆண்டவனின் அருளாகிய அமுதத்தினைப் பெற்ற அடிய வர்களின் அனுபவம் ஆறுமுகப் பெரு மானின் திருவடியைத் தியானிப்பதால் உண்டாகும் சிறப்பு, அறுபடை வீடுகளின் பெருமை ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

5. தேன்வண்ணப்பாடல்

இதில் செவ்வேட் பரமனாகிய முருகப் பெருமானைத் தேவர்கள், கிரகங்கள், முனிவர்கள், திசைபாலகர்கள், முதலான எண்ணில்லாதவர்களுடன் நடமாடி வந்து அற்புதக் காட்சியை வழங்குமாறு வேண்டப் படுகின்றது.

முருகனே இந்தப்பாடலை விரும்பிக் கேட்டான் என்பதைச் சுவாமிகள் தமது பாடல்களில் பல இடங்களில் குறிப்பிட்டுள் ளது இங்கு எண்ணத்தக்கதாகும்.

சிறந்த தாளக்கட்டும், நெடிய சந்தத்தையும் இனிய நடையும் கொண்ட இவ்வைந்து பாடல்களையும் பாடி ஐந்து பொருள்களையும் ஒவ்வொன்றாக முருகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வது பாம்பனடியார்களின் வழக்கமாகும்.

✡✡✡✡✡



Koviloor Digital Library



குமரனின் பஞ்சாசனம்

உயர்ந்தவர்கள் நமது இடத்திற்கு வரும் போது அவரவர்களுக்குரிய தகுதிக் கேற்ப ஆசனமளித்து அதில் அவர்களை அமர்த்தி உபசாரம் செய்ய வேண்டும். இவ்வகையில் சிவபெருமானுக்கு உரிய சிவாசனத்தைப் பற்றிய செய்திகளைப் பூஜாநூல்கள் விரிவாகக் கூறுகின்றன. இதனைப் போலவே குமரனுக்குரிய ஆசனத்தைக் குமார தந்திரநூல்கள் சிறப்புடன் கூறுகின்றன. இனி அந்த ஆசனத்தையும் அதன் ஐந்து அங்கங்களையும் இக்கட்டுரை யில் விரிவாகக் காணலாம்.

பஞ்சாசனமாகிய முருகனின் பீடத்தின் கீழே பிரணவமாகிய ஓங்காரம் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. அதன் மீது முதல் ஆசனமாகிய **ஆதாரசக்தி** பெரிய தவளை (இதனை ஆமை வடிவம் என்றும் கூறுவர்) வடிவில் அமைந்துள்ளாள்.


அதன் மீது அனந்தன் முதலான எட்டு பாம்புகளால் தாங்கப் பெற்ற **அனந்தாசனம்** அமைகின்றது.

அதன்மீது, அக்னி மூலையில் (வெண்ணிறமான) தர்மம்; கன்னிமூலையில் (பத்மராக நிறமான) ஞானம்; வாயுமூலையில் (பொன்னிறமான) வைராக்கியம். ஈசான மூலையில் கருநிறமான ஐசுவரியம், கிழக்கில் அதர்மம், தெற்கில் அஞ்ஞானம், மேற்கில் அவைராக்கியம், வடக்கில் அநைஸ்வர்யம், ஆகிய எட்டும் சிங்கங்களாக இருந்து **அஷ்டசிம்மாசனமாக** அமைகின்றன. இதன் மேற்பலகையின் மேற்புறமாகமாயையும், அடிப்புறமாக ஞானமும் அமைகின்றன.

அதன்மீது நான்காவதாக கிழங்கு, வித்து, முளை, தண்டு, கண்டகம், மொட்டு இதழ் கேசரங்கள் பொகுட்டு ஆகியவற்றுடன் கூடியதான பெரிய தாமரைமலர் ஆசனமாக அமைகின்றது. இதனைக் கமலாசனம் என்பர்.

இதன் எட்டு திசைகளிலும் அமைந்த இதழ்களில் சகுநி, ரேவதி, பூதநா, மகாபூதநா, நசீதிநீ, மாலிநீ, சீதளா, சுத்தா, முதலிய அஷ்டசக்திகள் எழுந்தருளியுள்ளனர். இவர்களின் தலைவியாக விசுவதோமுகி எழுந்தருயுள்ளாள். இவர்களைப் பீடசக்திகள் என்பர்.

அதன்மீது ஐந்தாவதாக அமைந் துள்ளது **"விமலாசனம்"**, ஆகும். இதனுள் தத்துவாசனமும் அமைந்துள்ளன. இவைகளே முருகனின் பஞ்சாசனம் எனப்படும் இதன்மீது வள்ளி தெய்வயானை உடனாய ஆறு முருகப்



குமரனின் பஞ்சாசனம்



Koviloor Digital Library



பெருமான் எழுந்தளியுள்ளார்.

இந்த ஆசனத்தில் அமைந்துள்ள கமலாசனத்தில் இதழ்களின் அடிவட்டங்கள், நுனிகள் இதழ்களில் சூரியமண்டலம், சந்திர மண்டலம், அக்னிமண்டலம், ஆகிய மண்ட லங்களும் அவற்றில் உருத்திரர், திருமால், பிரம்மா, முதலான அனேக தேவதைகள் பிரகாசத்துடன் எழுந்த ருளியுள்ளனர். மேலும் கிழங்கு, தண்டு தண்டுகளில் உள்ள முட்கள், கேசரங்கள் ஆகியவற்றில் எண்ணில்லாத புவனாதிபதிகளும் பலவேறு கணங்களும் வீற்றிருந்து முருகனைத் தொழுத வண்ணமாக உள்ளனர்.

இந்த ஆசனத்தைச் சிலையாக அமைத்துப் வழிபடும் வழக்கமில்லை. இதனை மந்திரப் பூர்வமாகச் சொல்லி முருகனின் பீடத்தில் மலரிட்டு வழிபடுவதே வழக்கம். கும்பாபிஷேகம் முதலான பெரிய பூஜைகளில் அமைக்கப்பெறும் யாகவேதிகை (மேடை) களை இந்த ஐந்து ஆசன வடிவில் அமைத்து வழிபடுகின்றனர்.

இந்த ஆசனத்தை எண்ணுவதும் வணங்குவதும் அகில உலகங்களையும், அதிலுள்ள எண்ணற்ற தேவர்களையும் தொழுததாகும். இத்தகைய பெருஞ்சிறப்பு பெற்றது இந்தப் பஞ்சாசனமாகும். ✡

குமரனின் ஐந்துவகை ஊர்திகள்

முருகப்பெருமானுக்கு மயில், ஆடு, யானை, தேர், இந்திரவிமானம் ஆகிய ஐந்தும் ஊர்திகளாக விளங்குகின்றன. குமார மஞ்சரியின் இரண்டாவது மலராகிய "மயிலும் மால்மருகனும்" என்ற நூலில் முருகனின் பலவகையான மயில்களைக் கண்டோம். மூன்றாம் மலரில் யானை, ஆடு ஆகியவை முருகனின் ஊர்திகளான வரலாற்றைக் கண்டோம். முருகனுக்குத் தேவர்கள் தேரினை அளித்தார்கள். அந்தத் தேரினை வர்ணனை யைக் கந்தபுராணம் தனிச்சிறப்புடன் குறிப்பிடுகின்றது.

இவ்வரிசையில் ஐந்தாவதான இந்திர விமானம் இந்திரனால் முருகனுக்கு அளிக்கப் பெற்றதாகும். எனவே இது அவன் பெயரால் இந்திரவிமானம் என்று அழைக்கப் படுகின்றது.

முருகன் ஆறுமுகராக வீற்றிருக்கும் நிலையில் வாகனங்களில் உலாவருவதில்லை. இந்திரவிமானத்திலேயே வலம் வருகின்றார். இது பன்னிரண்டு கால்களைக் கொண்டதாகும். திருத்தணி, திருச்செந்தூர் முதலிய தலங்களில் இந்திர விமானங்கள் உள்ளன. பொதுவாக ஆலயங்களில் ஷண்முகப்பெருமாளை இந்திரவிமானத்தில் எழுந்தருளிவைத்தே வணங்கவேண்டும் என்ற மரபு கடைபிடிக்கப் பட்டு வருகிறது. ✡



திருச்செந்தூர் (அலைவாய் உகந்த பெருமான்) தங்கரதத்தில் உலாவருதல்



Koviloor Digital Library



குமாரனின் பஞ்சாவரணம்

ஆவரணம் என்பதற்கு வீதிகள், அடுக்குகள் என்ற பலபொருள்கள் உள்ளன. மேலே சொன்ன குமரனின் பஞ்சாசனத்தைச் சுற்றி ஐந்து ஆவரணங்கள் அமைந்துள்ளன. இவற்றில் குமரனின் ஏவலைத் தலைமேற் கொள்ளும் தேவதைகள் வீற்றிருக்கின்றனர். இவர்களுக்கு ஆவரணதேவதைகள் என்று பெயர். இனி அந்த ஆவரணங்களைப் பற்றியும் அதில் வீற்றிருக்கும் தேவதைகளைப் பற்றியும் விரிவாகக் காணலாம்.

முதல் ஆவரணம் என்பது முருகனைச் சூழ்ந்துள்ள முதல் வீதியாகும் இதில் முருகனின் பஞ்சப்பிரம்மங்களான ஈசானர் முதலிய பஞ்சபிரம்ம மூர்த்திகளும் ஆறு அங்கங்களும் அமைந்துள்ளனர். இந்த வீதியில் வட கிழக்கில் ஈசானன், கிழக்கில் தத்புருஷன் தெற்கில் அகோரன், வடக்கில் வாமதேவன், மேற்கில் சத்யோஜாதன் ஆகிய பஞ்சபிரம்மங்களும் இவற்றின் இடையிடையே ஆறு அங்கங்களும் அமைந்துள்ளன.

இரண்டாவது ஆவரணத்தில் எட்டு குமார வித்யேசுவரர்கள் எழுந்தருளியுள்ளனர். இவர்கள் ஆறுமுகங்களும் நான்கு கரங்களும் கொண்டவர்கள் முருகனைத் தியானித்து வணங்கிய வண்ணம் இந்த ஆவரணத்தின் எட்டுத் திசையிலும் வீற்றிருக்கின்றனர். இவர்களின் பெயர் கிழக்கிலிருந்து வலமாக முறையே **ஜெயந்தன், அக்னிசிகன், கிருத்திகாபுத்ரன், பூதபதி, சேனானி, குகன், ஹேமசூலன், விசாலாட்சன்** என்பதாகும்.

மூன்றாவது ஆவரணத்தில் முருகனின் மனைவியரான வள்ளி, தெய்வயானையர், ஊர்திகளான மயில், யானை, ஏவல்களான சுமுகர், சுதாகர், அணுக்கத் தொண்டரான சுமந்தரீசர் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். இவர்களில் யானை கிழக்கிலும், தென் கிழக்கில் சுதேகரும், தெற்கில் வள்ளியும், தென்மேற்கில் சுமுகரும், மேற்கில் மயிலும், வடமேற்கில் தேவசேனாதிபதியும், வடக்கில் தெய்வயானையும், வடகிழக்கில் சுமந்தீச சண்டரும் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர்.

நான்கர்வது ஆவரணத்தில் திக்பாலகர்கள் அமைந்துள்ளனர். இவர்கள் கிழக்கில் இந்திரன், தென்கிழக்கில் அக்னி, தெற்கில் எமன், தென்மேற்கில் நிருதி, மேற்கில் வருணன், வடமேற்கில் வாயு வடக்கில் குபேரன், வடகிழக்கில் ஈசானன் வடகிழக்கிற்கும் கிழக்கிற்கும் நடுவில், அதோதிக்கான (பாதாளதிக்கின்) அதிபதியாகின விஷ்ணு, மேற்கிக்கும், தென்மேற்கிற்கிக்கும் நடுவில் (ஊர்த்துவதிக்காகிய ஆகாயத்தின் அதிபதியான) பிரம்மன் ஆகிய பத்து தசதிக்பாலகர்கள் பூசிக்கப்படுகின்றனர்.

ஐந்தாவது ஆவரணத்தில் முருகனின் தசாயுதங்களான பத்து ஆயுதங்கள் பூசிக்கப்படுகின்றன. இவை முறையே

கிழக்கில்	- வஜ்ராயுதம்
தென் கிழக்கில்	- சக்தி
தெற்கில்	- தண்டம்
தென் மேற்கில்	- கேடகம்
மேற்கில்	- பாசம்
வட மேற்கில்	- அங்குசம்
வடக்கில்	- கதை
வட கிழக்கில்	- திரிசூலம்
ஊர்துவதிக்கில்	- பத்மம்
அதோதிக்கில்	- சக்ரம்

என்பனவாகும். இவை உரிய திசைகளில் வைத்துப் பூசிக்கப்படுகின்றன.

கும்பாபிஷேகம், சாந்தி அபிஷேகம், பவித்ரோத்சவம் முதலான காலங்களில் இந்த ஆவரணத் தேவதைகளுக்குரிய கலசங்கள்



Koviloor Digital Library



வைக்கப்பெற்று அவைகளுக்குப் பூசனைகள் புரிவர். முருகன் அடியவர்களில் பலர் ஆத்மார்த்த பூசையில் இந்த பஞ்சாவரணங் களுடன் கூடிய முருகப் பெருமானை நாள்தோறும் பூசித்து மகிழ்வதைக் காண்கின்றோம். ✡✡✡✡✡

முருகன் வழிபட்ட ஐந்து கடம்பனூர்கள்

கீழ்வேளூர் என்ற சிவத்தலம் நாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ளதாகும். இந்த கீழ்வேளூர் தலத்தைச் சுற்றிக் கோயில் கடம்பனூர், இளங்கடம்பனூர், கடம்பர்வாழ்க்கை, பெருங்கடம்பனூர், ஆழிக்கடம்பனூர் என்ற ஐந்து தலங்கள் உள்ளன. இவற்றில் முருகப்பெருமான் சூரபதுமனைக் கொன்ற பாவம் தீர ஐந்து லிங்கங்களை அமைத்து வழிபட்டார் என்பர். இவை (ஐந்து) பஞ்சகடம்பனூர்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஐந்து கடம்பனூர் வட்டத்திலும் குமரன் சிவபூசை செய்யும்போது நடுவில் தடங்கல் நேராதிருக்கும் பொருட்டு அவருக்குக் காவலாக நின்ற காளியின் கோயில் கீழ்வேளூரில் உள்ளது. அவள் அஞ்சு வட்டத்தம்மை என்று அழைக்கப்படுகின்றாள்.

இந்நாளில் இவற்றுடன் மேலும் நான்கு தலங்களைச் சேர்த்துக் குமரன் வழிபட்ட தலங்கள் ஒன்பதென்று வழங்குகின்றனர். ✡

குமாரனின் பஞ்சபுராணம்

சிவாலயங்களில் தீபாராதனையின் ஒரு அங்கமாகத் திருமுறைகளில் இருந்து சில பாடல்களைப் பாடுதல் மரபு. இவற்றை முறைப்படுத்தித் தேவாரத்தில் ஒன்று, திருவாசகத்தில் ஒன்று, திருப்பல்லாண்டில் ஒன்று, திருவிசைப்பாவில் ஒன்று, பெரியபுராணத்தில் ஒன்று ஆக ஐந்து பாடல்களைப் பாடுவர். இவை ஐந்தினையும் பாடுவதற்குப் பஞ்சபுராணம் ஓதுதல் என்று பெயர். இவ்வகையில் முருகனாலயங்களில் தேவாரத்தில் ஒன்று திருப்புகழில் ஒன்று கந்தர் அலங்காரத்தில் ஒன்று, கந்தர் அனுபூதியில் ஒன்று, கந்தர் அந்தாதியில் ஒன்று என்று ஐந்து பாடல்களைப் பாடுவது வழக்கம். இவையும் பஞ்சபுராணம் என்றே அழைக்கப்பெறும். பின்னாளில் இவற்றுடன் முருகன் பிள்ளைத்தமிழ் நூலிலுள்ள பாடலொன்றையும் இணைத்து ஆறுபாடல் களைப் பாடுதல் மரமாயிற்று.

✡✡✡✡✡

முருகப்பெருமானின் ஐந்துறுப்பு கொண்ட தலைமுடி

அரசர்களுக்குரிய தலையாய சின்னம் அவர்கள் அணிந்துள்ள மகுட மாகும். அரசன் முடிசூட்டிக் கொள்வதைப் பெரிய விழாவாகக் கொண்டாடுவர். இதற்கு மகுடாபிஷேகம் என்று பெயர். முருகப் பெருமானைத் தேவர்கள் தமது சேனாதிபதி யாக இருந்து அவருக்கு பட்டாபிஷேகம் செய்து திருமுடியை சூட்டினர். முருகனின் இந்தத் திருமுடியாகிய கிரீடம் ஐந்து உறுப்புகளைக் கொண்டதென்று பரிபாடல் கூறுகின்றது. திருமுருகாற்றுப் படையிலும் இந்த ஐந்துறுப்புகள் கொண்ட திருமுடி கூறப்படுகின்றது. இந்த ஐந்து உறுப்புகள் தாமம், முகுடம், பதுமம், கிம்புரி. கோடகம் என்று பெயர் பெறுகின்றன.

✡✡✡✡✡



Koviloor Digital Library



ஐவகை மரங்கள்

பாற்கடலிருந்து பிறந்த ஐந்து கற்பக மரங்கள் "பஞ்சதருக்கள்" என்று புகழப்படுகின்றன. இவை தன்னிழலில் இருந்து வேண்டியவர்களுக்கு வேண்டியதை அளிக்கும் சக்திகொண்டவை என்று புராணங்கள் குறிப்பிடுகின்றன. ஐந்து மரங்களை வழிபடுதல், ஐந்து காடுகளை (பஞ்சாரண்ய க்ஷேத்திரங்கள்) அதில் எழுந்தருளிய ஐந்து சிவலிங்கங்கள் பெருமானை வழிபடுதல் என்பன தொன்றுதொட்டு இருந்துவரும் மரபாகும். இவ்வகையில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கருகாவூர் (முல்லைவனம்), அவளிவணநல்லூர் (பாதிரிவனம்), அரதைப் பெரும்பாழி (வன்னிவனம்) இரும்பூளை (பூளைவனம்), கொள்ளம் புதூர் (வில்வவனம்) எனும் தலங்கள் பஞ்சாரண்யங்களாகப் போற்றப்படுகின்றன. திருமால் வழிபாட்டிலும் பஞ்சகிருஷ்ணாரண்யங்கள் என்ற ஐந்து வனங்கள் போற்றப்படுகின்றன. இதுபோன்றே முருகனோடு தொடர்புடைய ஐந்து மரங்களையும் காண்கின்றோம். இவை, வேங்கை, குரா, கடம்பு, நாவல், நெல்லி, என்பனவாகும். இந்த ஐந்து மரங்களிலும் பெருமான் உறைகின்றான் என்பர். எனவே இவற்றைக் கொண்டு முருகனடியார்கள் வாசற்படிகள் முதலானவற்றைச் செய்வதில்லை. எந்தவகையில் இவை முருகனோடு தொடர்பு கொண்டுள்ளன என்பதைத் தொடர்ந்து காணலாம்.

வேங்கைமரம்

சூரசங்காரம் முடிந்து முருகப் பெருமான் திருத்தணியில் அமைதியுடன் வீற்றிருந்தபோது நாரதர் அவரிடம் வள்ளிமலையில் உள்ள வள்ளியைப்பற்றிக் கூறினார். முருகன் உடனே அவளைக் காண விரும்பி அவள் இருக்கும் தினைப்புனத்தைத் தேடிச்சென்றார். அங்கு அவளோடு காதல் மொழி பேசி நின்றார். அப்பொழுது வள்ளியின் வளர்ப்புத் தந்தையான நம்பிராஜன் தன் துணைவருடன் அங்கு வந்தான். அதைக் கண்ட முருகப் பெருமான் ஒரு வேங்கை மரமாகி நின்றார்.

நம்பிராஜன் வள்ளியிடம் மகளே, "புதியதாய் இந்த மரம் எப்படி இங்கு வந்தது என்று கேட்டான். இது "ஏதோ மாயம் போலுள் ளது. உடனே இதை வெட்டி எறியலாம்" என்று துணைவர்கள் கூறினார். அப்பொழுது வள்ளி, "தந்தையே இது முருகப்பெருமான் உறையும் மரம். இதனை வெட்ட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாள். முருகனும் ஒரு பல்லியாகி அந்த மரத்தின் மீது "பல, பல" வென்று ஒலியெப்பினார். நம்பிராசன் இது நல்லசகுனம் எதற்கும் மகளே நீ கவனமாக இரு", என்று சொல்லி விட்டு அவ்விடம் விட்டு அகன்றான்.

அன்றுமுதல் (நல்) வேங்கைமரம் முருகனாகவே கருதி வணங்கப்பட்டு வருகின்றது. வேங்கை மரத்தை முருகனடி யார்கள் வெட்டுவதில்லை. வீட்டில் நிலைப்படி முதலானவற்றிற்குப் பயன்படுத்துவதில்லை. முதிர்ந்து தானே விழுந்த வேங்கை மரத்தில் முருகனின் வடிவினைச் செய்து வழிபடுவது வழக்கம். கோவை மாவட்டத்தில் பல இடங்களில் உள்ள கிராமிய ஆலயங்களில் வேங்கைமரத்தால் செய்யப்பட்ட முருகனின் வடிவினைக் காணலாம்.

சுவாமிமலை முதலான சில தலங்களில் முருகன், வள்ளி திருமணவிழாவில் முருகன் வேங்கை மரமாகி நிற்கும் ஐதீகக் காட்சியை நடத்தி விழா கொண்டாடுகின்றனர்.

கந்தபுராணம் திருத்தணியை அடுத்த வள்ளிமலையை வள்ளிவாழ்ந்த இடமாகக் கூறுகின்றது. ஆனால் நாஞ்சில் நாட்டில் உள்ள வேளிர்மலையை வள்ளி வாழ்ந்த இடமாகத் தென்தமிழ்நாட்டினர் கூறுவர்.



Koviloor Digital Library



இம்மலை இந்நாளில் குமரிமாவட்டத் ...ள்ளது. வேளிர் மலையில் மணவிடைக் குமரர் ஆலயம் உள்ளது. இங்குதான் வள்ளி யின் தினைப்புனம் இருந்ததென்பர். இப்புனத்தில் மேலே சொன்ன வரலாற்றின் படி பெருமான் வேங்கைமரமாக நின்ற இடத்தில் ஒரு வேங்கைமரம் செழித்து வளர்ந்து இருந்ததாகக் கூறுவர். இப்பொழுது அதன் அடிப்பகுதி மட்டுமே உள்ளது. புதியதாக ஒரு வேங்கை மரம் இந்நாளில் அங்குத் தலமரமாக உள்ளது.

இந்த ஆலயக் கருவறையில் வள்ளி யம்மையோடு குமரன் காட்சியளிக்கின்றார்.

குரா மரம்

இது அபூர்வமான பெருஞ்செடி யாகும். திருவிடைக்கழி எனும் தலத்தில் இம்மரம் இருக்கின்றது. அருணகிரிநாதர் இந்த மரத்தடியில் பெருமான் நீங்காது உறைவதாகத் திருப்புகழில்,

சிறக்கு மாதவ
முனிவரர் மகபதி
இருக்கு வேதனும்
இமையவர் பரவிய
திருக் குராவடி நிழல்தனில்
- உலவிய பெருமாளே

கொந்துவார் குரவடியினும் அடியவர்
சிந்தை வாரிஜ நடுவினும் நெறிபல
கொண்ட வேத நன் முடியினும் மருவிய

திருக்குராவடி நிழல்தனில் உறைவோனே
திருக்கை வேல்வடி வழகிய - பெருமாளே

என்றும் குறிப்பிடுகின்றார்.

திருவிடைக்கழியில் பெருமான் குராமரத்தடியில் யோகத்தில் வீற்றிருக்கின்றார் என்பர். எனவே அங்கு மலர்பீடம் வைக்கப்பெற்றுப் பூசிக்கப்படுகின்றது. இந் நிலையை வேறெங்கும் காண இயலவில்லை.

கடம்ப மரம்

முருகப்பெருமானுக்கு உரிய பெயர்களில் தலையானது "கடம்பன்" என்பதாகும். அப்பர்சுவாமிகள் இந்தப் பெயரால் முருகனை "நம்கடம்பன்" என்று உரிமையோடு அழைக்கின்றார். அம்பிகை கடம்பவனத்தில் குயிலாக மகிழ்கின்றாள்.

கடம்ப மரத்தினை முருகப் பெருமா னாகவே எண்ணி வழிபடுவது வழக்கம்.

சங்க இலக்கியங்களில் முருகன் கடம்ப மரத்தில் இருப்பதை உணர்த்தும் வகையில் (பெரும்பாணாற்றுப்படையில்) கடம்பமர் நெடுவேள் என்றும் (பரிபாடலில்); கடம்பமர்ந்து என்றும் (ஐந்திணை ஐம்பதில்) செல்வக் கடம்பமர்ந்தான் என்றும் கூறப்பட்டுள்ளன. மேலும் திருவால வாயுடையார் புராணம் "கடம்பர் மன்றம் எங்கும் உற்றோங்கும் கந்தனை சிந்தனை செய்வோம்", என்றும், கந்தபுராணம் "கடம்பமர் காளை" என்றும் போற்றுகின்றன.

முருகப்பெருமான் பூசித்த பல கடம்பவனங்கள் தமிழகமெங்கும் உள்ளன. காஞ்சீபுரத்திற்குத் தெற்கில் கடம்பமரங்களால் சூழப்பட்ட தலம் ஒன்று உள்ளது. அதற்குக் கடம்பர் கோயில் என்பது பெயர். இங்கு மலையன், மாகறன் என்ற இரண்டு அசுரர்களைக் கொன்ற பாவம் தீர முருகப் பெருமான் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார் என்பர். (இதன் விளக்கத்தைப் பின்வரும் மலரில் காணலாம்).

நாவல் மரம்

கண்ணபிரான் புன்னை மரத்தினில் விரும்பி உறைகின்றான். அதன் கிளையில் அமர்ந்து கோபியர்களுக்கு சரணாகதியை விளக்கி னான். திருமாலடியார்கள் புன்னை மரம் போன்று செய்த வாகனத்தில் கண்ணனை அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். இதற்கான



Koviloor Digital Library



பாகவதக் கதை ஒன்றும் உள்ளது. அதுபோல முருகப் பெருமான் நாவல் மரத்தின் மீதமர்ந்து ஔவைக்கு அறிவுத்திறத்தினை உணர்த்தினான். அக்கதை வருமாறு :-

தமிழ் மூதாட்டியான ஔவைப் பிராட்டியாரின் மனதில், தானே அறிவில் பெரியவர் என்ற கர்வம் உண்டாயிற்று. அதை அறிந்த முருகன் அவருக்கு அறிவுபுகட்ட எண்ணினான். அதற்கான சமயத்தை எதிர்பார்த்திருந்தான்.

ஒரு சமயம் ஔவையார் கடும் வெய்யிலில் நடந்து பயணம் செய்து கொண்டிருந்தார். வழியில் சிறு சோலை இருந்தது. அங்கிருந்த நாவல்மரத்தடியில் ஔவையார் அமர்ந்தார். அங்கே சில சிறுவர்கள் மாடு மேய்த்துக் கொண்டிருந்தனர். ஒரு சிறுவன் நாவல் மரத்தின் மீது அமர்ந்து கொண்டிருந்தான். ஔவைப்பாட்டி அவனை நோக்கி, "அன்பனே நான் மிகவும் பசியாக இருக்கின்றேன் எனக்குக் கொஞ்சம் பழங்கள் பறித்துப் போடு," என்றார்.

அதற்கு அவன், "பாட்டி உனக்குச் சுட்டப்பழம் வேண்டுமா? அல்லது சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டான்.

பாட்டி ஒரு கணம் திகைத்தார். மரத்தில் உள்ள பழம் சுடுமா? சுட்டபழம் என்றால் என்ன? புரியவில்லையே? என்று மனதிற்குள் எண்ணினாள். எத்தனையோ புலவர்களைத் தனது தமிழ்ப்புலமைத் திறத்தால் வெற்றிகண்ட பெருமாட்டிக்கு இது புதிராகி விட்டது.

அவர் பையனை நோக்கி, "சுட்டபழமே போடு" என்றார். பையன் உடனே மரத்தின் கிளைகளை உலுக்கினான். நன்கு பழுத்த பழங்கள் பொலபொலவென கொட்டின.

பாட்டி அவற்றைப் பொறுக்கி அவற்றில் ஒட்டியுள்ள மணல் நீங்க ஊதித் தனது வாயிலிட்டார். அவர் ஊதுவதைக் கண்ட சிறுவன் சிரித்து பாட்டி பழம் நன்றாகச் சுடுகிறதா? இன்னும் நன்றாக ஊதிச் சாப்பிடுங்கள் என்றான்.

அவனுடைய சொற்களைக் கேட்ட ஔவையார் வியந்தார். செங்காய்களாகப் பறித்துப் போட்டால் அவற்றில் மணல் ஒட்டாது. ஒட்டினாலும் துடைத்து விட்டுச் சாப்பிடலாம். நன்கு பழுத்த பழங்கள் மண்மீது விழுந்தால் அதில் மண் ஒட்டும். அதனைத் துடைத்து எடுக்க முடியாது. ஊதிதான் நீக்க வேண்டும். அப்படி ஊதுவது சூடான பொருளை ஊதிச் சாப்பிடுவதை ஒக்கும். சிறுவன் செங்காய்கள் வேண்டுமா? நன்கு பழுத்த பழம் வேண்டுமா? என்பதைத்தான் சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டிருக்கின்றான்.

இதனை உணர்ந்த ஔவையார் சொல்லாடலில் அவனிடம் தான் தோற்று விட்டோமே என்று எண்ணினார். அந்த எண்ணத்தை ஒருபாட்டாகப் பாடினார்.

கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் -
பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு
நான் தோற்றேன்
ஈரிரவும் துஞ்சாதென் கண்.

(இதன் பொருள்: வலிய கடினமான கருங்காலிக் கட்டைகளைப் பிளந்து விடுகின்ற இரும்புக்கோடாலி எளிய மென்மையான வாழைத்தண்டைப் பிளக்கமுடியாமல் தோற்று அதனுள் சிக்கிக் கொள்கின்றது. அதுபோல பெரும்புலவர்களையெல்லாம் எனது புலமையால் வென்ற நான் காட்டில் கருத்த எருமைகளை மேய்க்கின்ற சிறுவனின் சொல் விளையாட்டில் தோற்றேன். இந்த தோல்வியை நினைத்து எனக்கு இரண்டு நாளைக்குத் தூக்கம் வராது என்பதாகும்.)

அவருடைய மனநிலையை அறிந்த முருகன் அவருக்கு மயில்மீது தோன்றிக்



Koviloor Digital Library



காட்சியளித்தான். பாட்டி அவனைப் போற்றினார். முருகனும் பாட்டிக்கு அன்போடு அருளாசி புரிந்து மறைந்தான்.

இந்த வரலாற்றைத் தொன்று தொட்டு சொல்லப்பட்டு வரும் கிராமிய பாட்டிக் கதை கள், தனிப்பாடல் திரட்டுகள் ஆகியவற்றால் அறியலாம்.

நாவல் மரத்தின் கீழ் முருகப் பெருமானை எழுந்தருளி வைத்து வழிபடா விட்டாலும் முருகனின் திருவிளையாடல் களைக் குறித்து பேசப்படும் கதைகளில் முருகன் நாவல் மரத்தின் மீதமர்ந்து நிகழ்த்திய இந்தத் திருவிளையாடலைச் சிறப்புடன் குறிப்பர். ஒளவையாரைப் பற்றி வெளிவந்த நாடகங்கள், திரைப்படங்கள் ஆகிய அனைத் திலும் இக்காட்சி இடம் பெற்றிருப்பதைக் காணலாம். முருகன் ஆலய கோபுரங்கள் விமானங்கள் ஆகியவற்றில் இந்நிகழ்ச்சியைச் சுதைச்சிற்பமாக அமைந்துள்ளதையும் காண்கிறோம்.

நெல்லி

முருகன் வள்ளியம்மையைத் தேடி தினைப்புனத்திற்குச் சென்றபோது வேங்கை மரமாய் நின்றான். ஒளவையாரிடம் பாடல் விரும்பியபோது நாவல் மரத்தின் மீது நின்றான். இதனால் அவனுக்கு ஜம்புகுமாரன் என்பது பெயராயிற்று. இதுபோன்றே அவன் பழனி மலைமீது நெல்லி மரத்தடியில் நின்று சித்தர்களுக்கு உபதேசித்தான். இதனால் அவனுக்கு "ஆமலக பண்டிதன்" என்பது பெயராயிற்று. சித்த மருத்துவத்தில் நெல்லிக் காய் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. சித்தன் வாழ்வு என்று பெயர் பெற்றத் தலமான பழனிமலையில் வீற்றிருக்கும் சித்தப் பிரசித்தனான பழனி ஆண்டவன் நெல்லி மரத்தின் கீழ் எழுந்தருளியிருப்பதும் பொருத்தமானதேயாகும்.

நெல்லி மரம் பலமருத்துவ குணங் களைக் கொண்டதாகும். நெல்லிக்கனியால் செய்த லேகியங்கள் மாறாத இளமையைத் தருவதாகும். நெல்லியை வற்றலாக்கி, பல சித்தமருந்துகளுடன் கலந்து பயன்படுத்து கின்றனர். உவர்ப்புமிக்க நீரின் குணத்தை மாற்ற நெல்லிக்கட்டைகளை அதில் இட்டு வைப்பர். நெல்லி இவ்வாறு பலவகையில் நமக்குப் பயன்படுகின்றது. சிலவகை நெல்லி மரங்களின் கனிகள் நீண்ட ஆயுளைத் தருவதாகும். சங்க இலக்கியங்களில் அதியமான் என்ற மன்னன் ஒளவைக்கு அருநெல்லிக்கனியைத் தந்ததும். அதற்காக அந்தப் பாட்டி அதியமானை, நீல மணிமிடற் றொருவன் போல மண்ணுலக பெரும நீயே," என்று பாடியதும் இங்கு நினையத்தக்கதாகும். ஆதிகாலத்தில் இருந்தே மருத்துவத்தில் நெல்லிக்கனி சிறந்த இடத்தைப் பெற்றுள்ளதை அறியமுடிகின்றது. நெல்லி, பசியையும் தாகத்தையும் அடக்குவதாகும். ஆகவே நெல்லிச் சித்தர்களுக்கு இன்றியமையாதது. இதனால் சித்தர்களுக்கு நெல்லி மரத்தின் கீழ் சித்தனாக இருந்து அருள்பாலிக்கின்றான். ஆனால் இப்பொழுது பழனிமலையில் நெல்லிமரம் இருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் பழனி மலையின் மீது முருகன் குராமரத்தின் அடியில் நின்றதாகத் தலபுராணம் கூறுகின்றது என்றாலும் பழனிமலையின் அடிவாரத்திலுள்ள திருவாவினன்குடியை "நெல்லிவனம்" என்று குறிப்பிடுவது எண்ணத் தக்கதாகும்.

இவ்வாறு மேற்குறித்த ஐந்து மரங்கள் குமரனோடு தொடர்புடையதாக சிறப்புடன் பேசப்பட்டாலும் மாமரம், வேம்பு ஆகிய மரங்களின் அடியிலும் முருகப்பெருமான் எழுந்தருளியுள்ளதைக் காண்கிறோம். காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்துள் அமைந்துள்ள தலவிருட்சமான மாமரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள முருகன் மாவடிக்கந்தர் என்று பெயர் பெறுகின்றார். இவரை "மாவடி வைகும் செவ்வேள்" என்ற கந்தபுராணம்



Koviloor Digital Library



போற்றுகின்றது. மேலும் இலங்கையில் உள்ள மாஆற்று முதலிய தலங்களும் மாமரத்தோடு தொடர்புடையன ஆகும்.

கொங்கு மாவட்டத்தில் பல மலைகளில் குருந்த மரத்தின் கீழ் முருகன் எழுந்தருளியுள்ளதையும் காண்கிறோம். சிவபெருமான் மணிவாசகருக்குக் குருந்த மரத்தின் கீழ் இருந்து உபதேசித்தான் என்று கூறுவர். மணிவாசகரும் "நிறை மலர் குருந்தம் கீழ் மேவிய அரசே" என்று சிவபெருமானைப் போற்றுகின்றார். அதனையொட்டி ஆறுமுகச் சிவனான முருகப்பெருமானும் குருந்த மரத்தடியில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறான் என்பர். கோவையை அடுத்த குருந்தமலை என்ற மலை ஒன்று உள்ளது. இங்குள்ள மலை மீது குருந்தமலை ஆண்டவர் என்ற பெயரில் முருகப்பெருமான் எழுந்தருளியுள்ளார். ✡

அழகு முருகனின் ஐவகை வடிவங்கள்

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் உரியவனாக ஐவகை நிலங்களுக்கும் உரியவனாக முருகன் நிகழ்கின்றான் என்றாலும் அவனை ஒவ்வொரு பகுதியில் ஒவ்வொரு வடிவில் சிறப்புடன் வழிபடுகின்றனர். இவை அந்தந்த வட்டாரங்களுக்கே உரியதாகும். இவ்வகையில் பிரமசாத்தன், வில்லேந்திய வேலவன், தண்டாயுதபாணி, பாலமுருகன், ஆறுமுகன் ஆகிய ஐவகை வடிவம் பரவலாக வழிபடப்படுகின்றது.

இவற்றில் முதலாவதான பிரமசாத்தனின் வடிவம் தொண்டைநாட்டின் பழம்பெரும் தலங்களான வல்லக்கோட்டை, காஞ்சிக் குமரகோட்டம், திருப்போரூர், உத்திரமேரூர் ஆகிய தலங்களில் மூலவராக அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டலத்தில் உள்ள புராதனமான சிவாலய விமானத்தின் கிரீவ கிழக்குக் கோட்டத்தில் யானைமீது அமர்ந்துள்ள பிரமசாத்தனை அமைத்திருப்பதும் எண்ணத்தக்கதாகும். அது போன்றே திருத்தணி, உத்திரமேரூர் முதலிய தலங்களில் பிரமசாத்தனுக்குரிய யானை முருகனுக்கு எதிரில் உள்ளது.

பிரமசாத்தன வடிவம் என்பது முருகன் மேற்கரங்களில் அட்சவடம், கெண்டி ஏந்தி முன்னிரண்டு கரங்களில் அபய முத்திரையும், ஊருமுத்திரையும் கொண்டிருப்பதாகும்.

இரண்டாவதான வில்லேந்திய வேலவனின் வடிவம் சோழமண்டலத்தில் திருவிடைக்கழி, மயிலாடுதுறை, பல்லவனீச்சரம், திருக்கடவூர் மயானம், திருத்துறைப்பூண்டி ஆகிய அனேக இடங்களில் பஞ்சமூர்த்திகளில் ஒருவராக இடம் பெற்றுள்ளது. மூலவராக இல்லாவிட்டாலும் இது இந்தப் பகுதிக்கே உரிய சிறப்பு வடிவமாகும். மயிலாடுதுறையில் மூலவராக வில்லேந்திய வேலனைக் காணலாம். இதில் முருகப் பெருமான் மேலிரண்டு கரங்களில் வஜ்ஜிர குலிசம் தாங்கிக் கீழ்க்கரங்களில் வில்லும் அம்பும் ஏந்தியுள்ளார். இருபுறமும் தேவியர் காட்சியளிக்கின்றனர்.

பாண்டிய மண்டலத்தில் குன்றக்குடி முதலிய தலங்களில் ஆறுமுகன் சிறப்பாக கொலுவிருக்கின்றார். இம்மண்டலமெங்கும் ஆறுமுகரைச் சிறப்பாகக் காணலாம். கொங்கு மண்டலமெங்கும் தண்டாயுதபாணியைக் காணலாம். உதயகிரி, மருதமலை, குருந்தமலை முதலான அனேக தலங்களில் தண்டாயுத பாணியாக முருகன் அருள்பாலிக்கின்றார்.

சேர நாடான கேரளமெங்கும் முருகன் பாலமுருகனாகவே காட்சியளிக்கின்றார். இம்மண்டலமெங்கும் வள்ளி, தெய்வயானை உடனாய முருகப்பெருமானைக் காணுதல் அரிது. காலப்போக்கில் அனைத்து ஆலயங்



Koviloor Digital Library



களிலும் வஜ்ஜிர குலிசம் மேற்கரங் களில் ஏந்தி கீழ்க்கரங்களில் அபயவரத முத்திரை தாங்கிய சுப்பிரமணியசுவாமியைத் தேவி யருடன் எழுந்தருளி வைக்கும் வழக்கம் பரவலாகக் கையாளப் பெற்றுள்ளது.

✡✡✡✡✡

குமரன் வழிபடும் ஐந்து லிங்கங்கள்

முருகப்பெருமான் சூரபத்மனாதியரைக் கொன்ற பாவம் தீரும் பொருட்டு அனேக இடங்களில் சிவலிங்கம் அமைத்துச் சிவவழிபாடு செய்ததைப் பலவேறு புராணங்கள் கூறுகின்றன.

இத்தகைய இடங்கள் சிலவற்றில் முருகன் ஐந்து லிங்கங்கள் வைத்து வழிபட்டதைக் காண்கிறோம். அப்படிக் குமாரன் வழிபட்டப் பஞ்சலிங்கங்களைக் கொண்டத் திருத்தலங்களைத் தொடர்ந்து காணலாம்.

திருச்செந்தூர் பஞ்சலிங்கம்

திருச்செந்தூரில் கருவறைக்கு பின்புறம் ஐந்து லிங்கங்கள் உள்ளன. முருகப்பெருமான் இவற்றை வழிபடும் நிலையில் வலது கையில் ஜெபமாலையும், தாமரைமலரையும் ஏந்தியவராகக் காட்சி யளிக்கின்றார். முருகப்பெருமானுக்குப் பூஜை நடைபெற்றதும், முருகன் சிவனைப் பூசிக்கும் வகையில் இந்த ஐந்து லிங்கங் களுக்கும் பூசனை நடைபெறுகின்றது.

நல்லூர் பஞ்சலிங்கங்கள்

தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்தை அடுத்துள்ள "நல்லூர்" தட்சிணகாசி என்று போற்றப்படும் சிறப்புடையதாகும். இங்கு மணி முத்தாறு, மயூரநதி, கோமுகி எனும் மூன்று ஆறுகள் கூடுகின்றன. எனவே இதனை தட்சிண திரிவேணி சங்கமம் போற்றுவர்.

இங்கு ஐந்து சிவலிங்கங்கள் அமைந்த சிவாலயம் உள்ளது. ஆதியுகத்தில் முருகப்பெருமான் இங்கு ஐந்து லிங்கங்களை அமைத்து வழிபாடு செய்தார் என்று கூறுவர். பின்னாளில் இந்த தலத்தின் சிறப்பை உணர்ந்த பஞ்சபாண்டவர்கள் தங்கள் வனவாசத்தின் போது இங்குவந்து இந்த லிங்கங்களை வழிபட்டார்கள் என்பர். பின்னாளில் அவர்கள் பெயரால் இந்த லிங்கங்கள் தரும லிங்கேசுவரர், பீமலிங்கே சுவரர், அருச்சுன லிங்கம், நகுலலிங்கம், சகாதேவலிங்கம் என்று அழைக்கப்பட்டன என்பர். முருகப்பெருமான் சிவபூசை செய்வதனைக் குறிக்கும் வகையில் இங்கு மகாமண்டபத்தில் வடக்கு நோக்கியவாறு தனிச்சந்தியில் எழுந்தருளியுள்ளார்.

கொங்கு மண்டலத்தில் குமரனும் பஞ்சலிங்கமும்

கோவை, ஈரோடு மாவட்டங்கள், உள்ளடக்கியதான கொங்குமண்டலத்தில் சிறப்புமிக்க முருகன் ஆலயங்களைக் காண்கின்றோம். இவற்றில் பெருமான் தண்டாயுதபாணியாக எழுந்தருளி அன்பர் களுக்கு அருள்பாலிக்கின்றார். இவற்றில் குறிப்பிடத்தக்கவை உதயகிரி, குருந்தமலை, மந்திரமலை, மருதமலை, ஓதிமலை முதலிய தலங்களாகும். இவை பெரும்பாலானவற்றில் முருகனுக்குப் பின்புறம் அமைந்த பிராகரத் தில் தனித்தனியாக ஐந்து சந்நிதிகளில் ஐந்து லிங்கங்கள் அமைந்திருக்கக் காண்கின்றோம். முருகனோடு பஞ்சலிங்கங்களை அமைத்து வழிபடும் வழக்கம் கொங்குமண்டலத்தில் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. ✡



Koviloor Digital Library



குமாரனின் பஞ்சகோட்டம்

தமிழகத்தில் அமைந்துள்ள பெரிய ஆலயங்களில் கருவறை, உள்மண்டபம் ஆகியவற்றின் வெளிப்புறச் சுவர்களில் ஐந்து மாடங்கள் அமைக்கப்பெற்று அதில் தெய்வ உருவங்கள் நிலைப்படுத்தப் பெற்று வணங்கப்படுகின்றன. இவை ஐந்து என்ற எண்ணிக்கையில் அமைந்திருப்பதால் ஐந்து கோட்டங்கள் அல்லது பஞ்சகோட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

காலப்போக்கில் ஐந்து கோட்டங்களுக்கும் அதிகமாக இருபத்தோரு கோட்டங்கள் வரைகூட அமைக்கப்பெற்றன என்றாலும் ஐந்து கோட்டங்களை அமைத்து வழிபடும் வழக்கமே அதிக அளவில் கடைபிடிக்கப் பட்டு வருகிறது.

இவ்வகையில் சிவாலயங்களில் அமையும் பஞ்சகோட்டங்களில் விநாயகர், தட்சணாமூர்த்தி, திருமால் (அல்லது லிங்கோற்பவர்) பிரம்மா, துர்க்கை, ஆகிய திருவுருவங்களைப் பஞ்சகோட்டங்களில் எழுந்தருளி வைத்து வழிபடுகின்றனர்.

இதுபோன்றே சில திருமால் ஆலயங்களில் விநாயகர், வைகுண்டவாசர், அச்சுதன், அனிருத்திரன், துர்க்கை ஆகிய ஐந்து வடிவங்கள் நிலைப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

அம்பிகை ஆலயப் பஞ்சகோட்டங்களில் ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, பராசக்தி ஆகிய ஐந்து சக்திகள் இடம் பெறுகின்றனர்.

ஆதி சக்தியை அன்ன பூரணியாகவும், கிரியாசக்தியை திருமகளாகவும், இச்சா சக்தியை வைஷ்ணவியாகவும், ஞான சக்தியை சரஸ்வதியாகவும், பராசக்தியை துர்க்கையாகவும் அமைத்து வழிபடுவதையும் காண்கிறோம்.

இதுபோன்றே முருகனாலயங்களிலும் பஞ்சகோட்டங்கள் அமைந்துள்ளன. முருகன் ஆலயங்களில் அமையும் பஞ்சகோட்டங்கள் பல வகைப்படுகின்றன. இவற்றில் மூன்று அமைப்புகளை இங்குக் காணலாம்.

முதலாவது அமைப்பில் விநாயகர், குருகுகன், விஷ்ணுகுகன், பிரம்மகுகன், குகதுர்க்கை ஆகிய ஐவரும் இடம் பெறுகின்றனர். இதில் குருகுகன் வஜ்ஜிரம், குலிசம் அபய, வரத, முத்திரை ஏந்தியவராகவும், விஷ்ணு குகன், வஜ்ஜிர சக்தியுடன் தண்டாயுதத்தை ஏந்தியவராகவும், பிரம்ம குகன் கெண்டி அட்சமாலை ஏந்தியவராகவும், விளங்குகின்றார். சைதைச் செங்குந்த கோட்டத்தில் விநாயகர் துர்க்கையுடன் இந்த மூன்று குகப்பெருமான்களைப் பஞ்ச கோட்டத்தில் கண்டு வணங்கலாம்.

இரண்டாவது வகையில் சிவாலயத்தில் இருப்பது போலவே விநாயகர், தட்சணா மூர்த்தி, திருமால், பிரம்மா துர்க்கை ஆகியோர் பஞ்சகோட்டங்களில் வீற்றிருக்கின்றார்.

மூன்றாவது வகையில் ஐந்து கோட்டத்திலும் முருகனின் வடிவங்களையொத்த ஐந்து மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். இவர்களுக்கு தனித்தனி பெயர்கள் வழங்குகின்றன.

குகதுர்க்கா

(சிவதுர்க்கை, விஷ்ணுதுர்க்கை என்பது போல குகனின் சக்தி, குகதுர்க்கை ஆவாள்.) இவள் தனது ஆறுகரங்களில் மேற்கரங்களில் சங்கு சக்கரத்தையும் அதன் கீழிரண்டு கரங்களில் வாள், கேடயத்தையும், முன்னிரண்டு கைகளில் அபயம் ஊரு முத்திரைகளையும் கொண்டுள்ளாள். மயில் இவளுடைய வாகனமாகும். இந்த அமைப்பை இப்போது முருகன் ஆலயங்களில் காண முடியவில்லை.





Koviloor Digital Library



மேலும், முருகனின் தேவியர்களான தெய்வயானைக்கும் வள்ளிக்கும் தனியே திருக்கோயில்கள் அமைக்கும் வழக்கமும் இருக்கின்றது. திருப்போரூர், திருவிடைக்கழி, ஆகிய இடங்களில் பெரிய தனி ஆலயமாக தெய்வயானைக்குக் கோயில் அமைந்திருக்கக் காணலாம். காஞ்சீபுரம் திருத்தணிகை, திருச்செந்தூர் முதலிய தலங்களில் வள்ளி, தெய்வயானை ஆகியோருக்குத் தனித்தனி சிற்றாலயங்களைக் காண்கின்றோம். இச்சந்நிதி களின் பஞ்சகோட்டங்களில் பஞ்சசக்திகளான ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, பராசக்தி, ஆகிய ஐந்து வடிவங்கள் அமைக் கின்றனர். இவர்களுக்குப் பதிலாக முன் சொன்னதுபோல, அன்னபூரணி, விஷ்ணு துர்க்கை, திருமகள், சரஸ்வதி, குகதுர்க்கை ஆகியோரையும் அமைத்து வழிபடுவது உண்டு. ✡

ஐந்துமுகக் குமரர்

ஈரோடு மாவட்டத்தில் ஓதிமலை என்ற பெரியமலை உள்ளது. இதன் அடிவாரத் தில் இரும்பறை என்ற ஊர் உள்ளது. இங்கு மலையின் மீது அழகிய முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இதனுள் ஐந்து முகங்களும் எட்டுகரங்களும் கொண்டவராக முருகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இவரை "ஓதிமலை வேலவர்" என்றழைக்கின்றனர். இந்த மலை நெடிதுயர்ந்தமலையாதலால் ஏறுவதற்குச் சற்றுக் கடினமானது.

மலையடிவாரத்தில் உள்ள இரும்பறை யில் கயிலாயநாதர் கோயில் என்ற சிவாலயம் உள்ளது. ஓதிமலை வேலவரின் உலாத் திருமேனிகள் இந்த ஆலயத்தில் எழுந்தருளி வைக்கப் பெற்றுள்ளன. இங்கு ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்டவராக முருகன் விளங்குகின்றார். ஆறுமுகப் பெருமானின் ஐந்து முகங்களும், எட்டு கரங்களும் மலை மேலே தங்கிவிட, ஒரு முகமும், நான்கு கரங்களும் கொண்டவராக முருகன் கீழே உள்ள ஆலயத்தில் எழுந்தருளி அருள்பாலிக் கின்றார்.

பிரணவத்தின் பொருள் தெரியாத, பிரமனை முருகன் இங்கு இரும்புச் சிறையில் அடைத்தார் என்றும் அதனால் இவ்வூருக்கு இரும்பறை என்ற பெயர் வந்ததென்றும் கூறுவர். முருகன் இங்குக் கயிலாயநாதரான சிவபெருமானுக்குப் பஞ்சப்பிரம்மமாகக் காட்சியளித்து ஓங்காரத்திற்குப் பொருள் உரைத்து அப்படியே ஐந்துமுகம் கொண்ட சுப்பிரமணியராகக் காட்சியளிக்கின்றார் என்பர்.

இத்தகைய ஐந்துமுகக்குமரனை வேறெங்கும் கண்டு தரிசிக்க முடியவில்லை யாதலால் இது அபூர்வமானதாகவும் சிறந்ததாகவும் போற்றப்படுகின்றது. ✡

அழகன் விரும்பும் ஐந்து மலர்கள்


முருகப் பெருமான் குறிஞ்சி நிலக்கடவுள். குறிஞ்சி நிலம் எண்ணிலாத வகைப்பூக்கள் பூத்துக் குலுங்குமிடமாகும். அவையனைத்தும் முருகனுக்கு விருப்பமானவையே. என்றாலும் கடம்பு, வெட்சி, செங்கழுநீர்ப் பூக்கள், செங்காந்தள், கூதளம் ஆகிய ஐந்தும் முருகவழிபாட்டில் தனிச்சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றால் முருகன், கடம்பன், வெட்சிவேள், காந்தட்கந்தன், செங்கழுநீர் வரையன், கூதாளன் எனச் சிறப்புப் பெயர்களைப் பெறுகின்றான். இந்த ஐந்து மலர்களின் பெயர்களையும் ஒரே வரிசையில் வரும்படி வேல்விருத்தத்தில் "கொந்தார் மலர்க் கடம்பும் கெச்சைமாலையும் குவளையும், செங்காந்தளும் கூதாள மலரும் தொடுத்தணியும் மார்பினன் கோலத்திருக்கை வேலே" என்று அருணகிரிநாதர் பாடுகின்றார்.



Koviloor Digital Library




பஞ்சமங்கல வடிவங்கள்



சேவல் - வஜ்ராயுதம் - ஓங்காரத்துள். வேல் - குலிசாயுதம் - மயில்.

சமயச் சான்றோர்கள் தங்கள் இருப்பிடவாயில் முகப்பில் சமயச்சின்னங் களை வரைந்து வைப்பது வழக்கம். இத்தொகுப்பில் ஐந்து உருவங்கள் இடம் பெறுகின்றன.

வைணவர்கள், நடுவில் திருமண்ணையும், அதன் இரண்டு பக்கங்களில் சங்கு, சக்கரங்களையும் அவற்றின் இரண்டு பக்கமும் அனுமன், கருடனையும் வரைந்து வைக்கின்றனர். பெரும்பாலான வைணவர்களின் வீட்டு முகப்பில் இந்த ஐந்து வடிவங்களையும் காணலாம். இதுபோன்றே சைவர்கள் நடுவில் ஓம், அதன் இருபுறம், மான், மழுவையும் அதன் இருபுறம் நந்தி, பிருங்கியையும் அமைப்பர். இதுபோலவே முருகனடியார்கள் நடுவில் வேலாயுதத்தையும் அதன் இருபுறம் வச்சிர குலிசத்தையும் அதன் இருபுறம் மயில், சேவலையும் அமைத்துள்ளனர். ஆனால் பரவலாக இதனைக் காணமுடியவில்லை. இதனை மீண்டும் பரப்ப வேண்டியது முருகனடியார்களின் கடமையாகும்.



அட்சமாலை-அம்பு-வேல்-வில்-கமண்டலம்.

முருகனின் பஞ்சாயுதங்கள்

தென்னிந்தியச் சமய மரபில் தெய்வங்களைச் சிறப்புடன் வழிபடுவது போலவே அந்த தெய்வங்களின் ஆயுதங்களையும் வழிபடுதல் வழக்கமாகும்.

இவ்கையில் முருகப்பெருமனுடைய பூஜையிலும் பஞ்சாயுத வழிபாடு சிறப்பான இடம்பெறுகின்றது. இந்தப் பஞ்சாயுதங்கள் வேல், வில், அம்பு, அட்சமாலை, கமண்டலம் என்பனவாகும். இவற்றின் முதலில் **ஓம்** என்றும் முடிவில் **நம:** என்றும் சேர்த்துப் பஞ்சாயுதபூஜை செய்வர்.





Koviloor Digital Library



முருக வழிபாட்டில் ஐம்பெரும் தீர்த்தங்கள்

முருகவழிபாட்டில் தீர்த்தங்கள் தனிச்சிறப்பிடம் பெறுகின்றன. முருகனின் தந்தையானச் சிவபெருமான் தீர்த்தங்களின் வடிவமாகவே விளங்குகின்றார். இதனை மாணிக்கவாசகப் பெருமான் "தீர்த்தன் நல் தில்லைசிற்றம்பலவன்" என்றும் அப்பரடிகள் "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே" என்றும் குறிப்பிடுதல் காண்க. முருகனின் வளர்ப்புத் தாய் நீர்மகளான கங்கையாவாள் இதனால் முருகனுக்குக் ''காங்கேயன்'' என்பது பெயராயிற்று.

முருக வழிபாட்டில் இடம்பெறும் ஐம்பெருந் தீர்த்தங்களான குமாரதீர்த்தங்கள், வள்ளித்தீர்த்தங்கள், வேலாயுததீர்த்தங்கள், மயில்தீர்த்தங்கள், சரவணப்பொய்கை என்ற ஐந்தையும் தொடர்ந்து காணலாம்.

குமாரதீர்த்தங்கள்

முருகன் சிவபூசைச் செய்யவும் அடியவர்களின் தாகத்தைத்தீர்க்கவும் அமைத்த தீர்த்தங்கள். அவர் பெயரால் குமார தீர்த்தம், குமாரதாரை, சுப்பிரமணியதீர்த்தம் என்றுப் பலவாறு அழைக்கப்படுகின்றன.

மேலும் அவர் தனது தாயான பார்வதி தேவி சிவபூசனைச்செய்ய உண்டாக்கிய ஆறு சேயாறு என்ற பெயரில் திருவண்ணாமலை செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓடிப் பாலாற்றில் கலக்கின்றது.

சுப்பிரமணியா என்ற கன்னட நாட்டுத் தலத்தில் மலையருவியாகக் குமாரதாரை விளங்குகின்றது. திருவிடைமருதூர், திரு விடைக்கழி முதலிய அனேக தலங்களில் முருகனின் பெயரால் அமைந்த தீர்த்தங் களைக் காணலாம்.

வேலாயுத தீர்த்தங்கள்

முருகனுக்கு அடுத்தபடியாக அவரு டைய அருளாற்றலாக விளங்கி ஐந்தொழிலை யும் நடத்துகின்ற ஞானவேல் உண்டாக்கிய தீர்த்தங்களும் பல உள்ளன. அவை அதன் பெயரால் வேல்தீர்த்தம், வேலாயுததீர்த்தம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. திருவேற்காடு, திருச்செந்தூர் முதலிய தலங் களில் வேலாயுததீர்த்தங்களைக் காணலாம்.

வள்ளிதீர்த்தங்கள்

முருகனின் தேவியான வள்ளியம்மை மலையிடை வதிந்த போது சிறப்பாகப் போற் றிய தீர்த்தங்கள் அவள் பெயரால் வள்ளி தீர்த்தங்கள் என்று அழைக்கப்பெற்றன. வள்ளி வாழ்ந்ததாகக் கூறப்படும் வடாற்காடு மாவட்டத்திலுள்ள வள்ளிமலை, குமரி மாவட்ட நாஞ்சில் நாட்டு வேளிர்மலை ஆகிய இடங்களில் வள்ளி சுனைகளைக் காணலாம். வள்ளி தினைப்புனம் காத்துக்கொண்டிருந்த போது வயோதிகனாக வடிவம் கொண்டு அங்கு வந்த முருகப்பெருமான் தனக்குப் பசிக்கின்றது என்று அவளிடம் கூறினார். அவள் தேனையும், தினைமாவையும் அவ ருக்கு அளித்தாள். அதை உண்ட அவன் விக்கியது போல நடித்தான். அதைக்கண்ட வள்ளி அவனை அழைத்துச் சென்று சுனையில் நீர்பருகச் செய்தாள். இப்படி வள்ளி யின்கரமும், முருகனின்கரமும் பட்டதால் அந்த சுனைகள் புனிதமடைந்தன. இன்றளவும் மக்கள் இத்தீர்த்தங்களைப் புனித நீராகப் போற்றி வருகின்றனர். இவற்றில் பல சுனைகள் சூரியனின் கதிர்கள் தொடமுடியாத பாறைச் சரிவில் இருக்கின்றன. இவற்றைச் சூரியன் காணாச்சுனைகள் என்றும் கூறுவர்.



Koviloor Digital Library



திருத்தணிகைமலையில் பாறைகளுக்கு இடையே வள்ளியம்மை நீராடி மகிழ்ந்த இயற்கையான குளம் உள்ளது. இது வள்ளிதீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. திருச்செந்தூரிலும் வள்ளிதீர்த்தத்தைக் காண்கிறோம்.

மயில்தீர்த்தங்கள்

முருகப்பெருமானின் மயிலானது முருகனையும், சிவபெருமானையும் பூசிக்க வேண்டிப் பல தீர்த்தங்களை அமைத்தது. இவை அதன் பெயரால் மயில்தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றன. குன்றக்குடி, திருமயிலாடி, மயிலம் முதலிய இடங்களில் மயில் தீர்த்தத்தைக் காணலாம். மயிலு க்குத் தோகை என்பது பெயர். எனவே இவை தோகையடித் தீர்த்தங்கள் என்றும் அழைக்கப்பெற்றன.

சரவணவப்பொய்கை

முருகன் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறிகளாகத் தோன்றினான். அவர் அத்தீப்பொறிகளை அக்கினியிடம் கொடுத்தார். அதன் வெப்பத்தைத்தாங்க மாட்டாத அக்னி அத்தீப்பொறிகளை வாயுவிடம் கொடுத்தார். வாயுவும் அதனை ஏந்த முடியாமல் கங்கையிடம் அளித்தார். கங்கை தனது உற்பத்தித்தானமான நாணற் காட்டின் நடுவேயுள்ள மானசரோவரத்தில் அதனை விடுத்தாள். அங்கு ஆறு தாமரை மலர்களின் மீது ஆறு குழந்தைகளாக முருகப்பெருமான் தோன்றினார். அந்த இடமே சரவணப்பொய்கையாகும். அந்த இடத்தை நினைவு கூறும் பொருட்டு முருகத் தலங்களில் உள்ள திருக்குளங்களுக்குச் சரவணப்பொய்கை என்று பெயரிடுதல் மரபாயிற்று. சென்னைக் கந்தகோட்டம். திருத்தணி, பெரும்பேறு முதலிய அனேகத் தலங்களில் சரவணப் பொய்கை என்ற பெயரில் அமைந்த தீர்த்தங்களைக் காணலாம். எண்ணிக்கையளவில் அதிகமான இருப்பது சரவணப் பொய்கைகளேயாகும்.

முருகத்திருத்தலங்களில் பலவகையான பெயர்களில் பல தீர்த்தங்கள் இருந்தாலும் இந்த ஐந்துவகைப் பெயரில் அமைந்த தீர்த்தங்களே அதிக எண்ணிக்கைக் கொண்டதாக அமைந்துள்ளன. ✡

முருகனுக்கு தேவியர் கொண்டு வந்த ஐந்து சீதனங்கள்



தமிழகத்தில் திருமணமாகிப் புகுந்த வீட்டிற்குச் செல்லும் பெண்களுக்குச் சீதனமளிப்பது வழக்கம் இதனைப்பெறுவது மணமகளின் உரிமையாகும். இவ்வகையில் முருகன் வள்ளியை மணந்தபோது வள்ளிக்குச் சீதனமாக வேடர்கள் கொடுத்த பொருட்கள் ஐந்தாகும். இவை ஊதுகொம்பு, சேவல், வேலாயுதம், மயில் வாகனம், மலையாட்சி என்பனவாகும்.

இதுபோன்றே தெய்வயானை அம்பிகைக்குத் தேவர்கள் திருமணத்தின் போது அளித்த ஐந்து சீதனங்கள் இடி, குலிசம், ஐராவதம், பொன்னுலகஆட்சி, இந்திரஞாலத்தேர் என்பனவாகும். ✡



Koviloor Digital Library



அருணகிரிநாதர் அருளிய ஐவகைப் பாடல்கள்

அருணகிரிப்பெருமான் முருகப் பெருமானைப் பாடிய பாடல்கள் ஐந்து வகைப்படும்.

இவை அவர், பலதலங்களுக்கும் சென்று
பாடிய **திருப்புகழ்,**
வில்லிபுத்தூர் ஆழ்வாரை வாதில் வெல்வதற்குப்
பாடிய **கந்தர்அந்தாதி,**
முருகனை நினைந்து அவனுடைய அனுபூதியைப் பெற்றுப்
பாடிய **கந்தர் அனுபூதி,**
அழகிய குமரனுக்கு அலங்கார மாலைகளாகத் தொடுத்துப்
பாடிய **கந்தர் அலங்காரம்,**
சுகமதாகி நின்று வேலனின் புகழை விரிவாகப்
பாடிய **திருவகுப்புகள்** என்ற ஐந்து வகைப்பாடல்களாகும்.

பஞ்ச ப்ரம்ம மந்திர பீஜம்

சிவபெருமான், சக்திதேவி, விநாயகர் முதலான அனைத்து தெய்வங்களுக்கும் பஞ்சபிரம்ம மந்திரம் என்ற சிறப்பான மந்திரம் உள்ளது. முருகனுக்குரிய பஞ்ச ப்ரம்ம மந்திரத்தை குமாரதந்திரம் சிறப்பாகக் கூறுகின்றது. இதன் மூலாதாரமான பீஜம் எழுத்து "ஸம்" ஆகும்.

பஞ்ச ப்ரம்ம பீஜம்:
"ஸ"காரம் பிரதமம் பிந்து
ஸத்யோஜாதஸ்ய பீஜம்
ஓம் ஸம் ஸத்யோஜாதாய நம:
த்ருதீய ஸ்வர ஸம்யுக்தம் வாமதேவம் உதாஹ்ருதம்
ஓம் ஸிம் வாமதேவாய நம:
பஞ்சம ஸ்வர ஸம்யுக்தம் அகோர பரம்ம பீஜம்
ஓம் ஸூம் அகோராய நம:
ஏகாதச ஸ்வரோபேதம் புருஷம் பரிபட்யதே
ஓம் ஸைம் தத்புருஷாய நம:
த்ரியோதச ஸ்வரோ பேதம் ஈசானம் பஞ்சமம் இதி
ஓம் ஸௌம் ஈசானாய நம:
ஏதது பஞ்ச ப்ரும்ம பீஜம்

முருகப்பெருமானின் பூஜையின் ஒரு அங்கமாக இந்தப் பஞ்சபரம்மமந்திரம் சிறப்பாக ஓதப்படுகின்றது. 



Koviloor Digital Library



முருக பஞ்சாட்சரம்

இந்திய மரபில் ஒவ்வொரு கடவுளுக்குமுரியதாக சில ஒலியெழுத்துக்கள் உள்ளன. இவை பீஜாட்சரங்கள் என்றழைக்கப்படும். இந்த ஒலி எழுத்துக்கள் அடங்கிய மந்திரங்களை ஓதி பக்தர்கள் ஜெபம் செய்கின்றனர். இந்த மந்திரங்கள் பலவகைப்படுகின்றன. இவற்றிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையைக் கொண்டு இவை ஒரெழுத்து மந்திரம், மூன்றெழுத்து மந்திரம், ஐந்தெழுத்து மந்திரம், ஆறெழுத்து மந்திரம், இருபத்தொரு எழுத்து மந்திரம், ஐம்பத்தோரு எழுத்து மந்திரம் என்று பலவகைப் படுகின்றன. இவற்றில் "ஐந்தெழுத்து"க் களைக் கொண்ட மந்திரங்கள் சிறப்புடையதாகக் கொள்ளப்படுகின்றன. இது வடமொழியில் "பஞ்சாட்சரம்" என்று அழைக்கப்படும்.

பொதுவாக அனைவருக்கும் பஞ்சாட்சரம் என்றதும் சிவபஞ்சாட்சர மந்திரமான "நமசிவாய" அல்லது "சிவாயநம" என்ற சிவ மந்திரமே நினை வுக்கு வருகிறது. இந்த மந்திரத்தைக் காட்டிலும் வலிமை உடையதாக முருகபஞ்சாட்சரத்தை முருகனடியார்கள் சிறப்பாகப் போற்றுகின்றனர். இது குமார நம: என்பதாகும். இதனை ஓதியே பரமேசுவரன் முருகப்பெருமானிடம் பிரணவத்தின் உண்மைப் பொருளை அறிந்தான் என்று கூறுவர். இதனை அருணகிரிநாதப் பெருமான் கந்தர நுபூதியில் நாதா "குமரா நம" ஓதாய் என ஓதியது எப்பொருள் தான் என்று பாடி அருள்கின்றார். இந்த



சிவபெருமான் முருகப்பெருமானிடம் ஓம் என்ற மந்திரத்தின் உட்பொருளை அறிதல்-திருப்போரூர்.

குமரன் என்ற சொல்லில் உமா என்ற சொல்லும் ஹர என்ற சொல்லும், மறைந்து உள்ளன. "க்" என்பதற்கு உள்ளே ஒளியைத் தோற்றுவித்தல் என்பது பொருள். இந்த உள் ஒளியைத் தோற்றுவிக்கும் "க்" என்ற எழுத்தோடு உமா, அரன் என்ற சொற்களும் சேர்ந்து குமாரன் என்று ஆயிற்று. ஆதலின் குமரா நம: என்ற இந்த மந்திரத்தை ஓயாது ஜெபித்தால் இருதயத்தின் உள்ளே ஒளி மண்டலம் தோன்றும். அந்த ஒளியின் நடுவில் சிவசக்தியின் கூட்டாக முருகன் தோன்றுவான. அவனுக்குக் குகன் என்று பெயர். இந்த மந்திரத்தை ஓயாது ஜெபித்தால் சகல காரியங்களும் சித்தியாகும்.

மேலும் "குமரா குகா" என்பதும் குமரகுரு என்பதும் முருகனின் ஐந்தெழுத்து மந்திரங்களாகும். இந்த மந்திரத்துடன் பிரணவத்தையும் சேர்த்து ஓயாது சொல்வதால் இகபரசௌபாக்கியங்களை எளிதாகப் பெறலாம் என்று முருகனடியார்களின் உறுதியான நம்பிக்கையாகும். ✡



Koviloor Digital Library





குமாரமஞ்சரி

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.

தொகுப்பாசிரியர் : **பூசை. ச. அருணவசந்தன்**

குமாரனின் பெருமையை விளங்கும் இந்த ஐந்தாம் மலரினை மலிவுப் விலை பதிப்பாக வெளியிடத் துணைபுரிந்த கீழ்க்காணும் அன்பர்களுக்கு எமது நன்றி. இவர்கள் பலநலமும் பெற்றுவாழச் செவ்வேட்பரமன் திருவடிகளைப் பிராத்திக்கின்றோம்.

1. திரு. **K. P. துரை** B.E., புவனேசுவரி நிலையம், சென்னை - 600 061.
2. திரு. **வ. வீரராகவன்** 29, பீமண்ண கார்டன் தெரு, ஆழ்வார்பேட்டை, செ-18
3. திரு. **பாஸ்கர்,** நூலகர், டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகம், சென்னை-600 090
4. சிவஸ்ரீ. **நடராசன்** "ஷர்மிள்" கன்ஸ்டரக்ஷன்ஸ், அயன்புரம், சென்னை.
5. கயிலைப்புனிதர் **டாக்டர். மாணிக்கம்,** M.D., குரோம்பேட்டை, சென்னை.
6. செல்வன் **R. பிரவீண்குமார்,** L1/4, அண்ணா பல்கலைக்கழக ஊழியர் குடியிருப்பு, கிண்டி, சென்னை - 600 025.
7. திரு. **Dr. V.P.R. வரதராஜன்** B.Sc., M.B.B.S. 94, டாக்டர். நடேசன் ரோடு, மைலாப்பூர், சென்னை - 600 004.
8. திரு. **S. கார்த்திக்,** H/37, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-600041.
9. திருமதி. **கௌரிரவிகுமார்,** வடபழனி, சென்னை - 600 026.
10. **Miss. MARIEKE,** Boat Club Road, Raja Annamalai Puram, Chennai - 600 028.
11. திரு. **V. தோதாத்திரி,** திருநெல்வேலி அல்வா ஸ்டால், 184, வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
12. **டாக்டர்.டி.செல்வராஜ்,** 21, ஆண்டவர்தெரு, என்.ஜி.ஓ.நகர், பொன்னேரி-601204.

M.O. / D.D. / Cheque அனுப்புவோர்.

சிவசுந்தரி கலைக்கூடம் என்ற பெயருக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

இந்நூல் கிடைக்குமிடம்

1. **செந்தில் ஆண்டவர் என்ஜினியரிங் ஏஜென்சி (பி) லிமிடெட்.,** எண். G-5, லட்சுமி காம்பளக்ஸ், 155/156, எல்லையம்மன் கோயில் தெரு, பெசன்ட் நகர், சென்னை - 600 090. (Near Besant Nagar Terminus).
2. **நற்பவி (தெய்வீக யந்திரங்கள் தயாரிப்பவர்கள்)** உருத்திராட்சம், ராசிக்கற்கள், ஸ்படிகமாலை, நவரத்தினமாலை, முத்து, பவளம் யாவும் கிடைக்கும். எண்.68, ஹாங்காங் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், க.எண். 9, 10 ராமநாதன் தெரு, தி.நகர், செ-17 போன்:8238754.

